B.COM
Year – II
Semester – IV
Paper - II

# Tamil - IV

## Centre for Distance and Online Education

श्रीचन्द्रशेखरेन्द्रसरस्वतीविश्वमहाविद्यालयः


**Sri Chandrasekharendra Saraswathi Viswa Mahavidyalaya**
Deemed to be University u/s 3 of UGC Act 1956 - Accredited with 'A' grade by NAAC
**Enathur, Kanchipuram 631561.**
Sponsored and run by Sri Kanchi Kamakoti Peetam Charitable Trust

**Course Writers**

Dr. K. Kavitha
Assistant Professor
Department of Tamil
SCSVMV

Ms. R. Subashini
Assistant Professor
Department of Tamil
SCSVMV

**Programme Coordinator**

Dr. S. Swaraj
CDOE
SCSVMV

**Chief Editors**

Dr. B. Balaji Srinivasan
Director, CDOE
SCSVMV

Ms. Trisha
Assistant Professor
Department of Tamil
SCSVMV

இளநிலைப் பட்டப்படிப்புகளுக்குரிய

இரண்டாமாண்டு - நான்காம் பருவம்

தமிழ் - தாள் - IV

**பாடத்திட்டம் ( 2024- 2025 )**

**அலகு;-1** செய்யுள் பகுதி

1. குறுந்தொகை - 10 பாடல்கள், பா.எண்.02, 03, 16, 20, 31, 40, 49, 69, 124, 167

2. புறநானூறு - 03 பாடல்கள் பா.எண்.18, 266, 279

**அலகு;- 2** காப்பியம்

1. சிலப்பதிகாரம் - வழக்குரை காதை - 80 அடிகளும் 3 வெண்பாக்களும்

2. பெரிய புராணம் - அப்பூதியடிகள் நாயனார் புராணம் 45 பாடல்கள் &

**அலகு 3:** இலக்கணம்

1. தமிழ் மொழியின் அமைப்பு - பேராசிரியா, வ.ஜெயதேவன் & ய. மணிகண்டன் ப.5 முதல் 20 வரை

**அலகு 4** இலக்கணம்

சொல்லியல் - பெயர்ச்சொல், வினைச்சொல் ப.36 முதல் ப.62 வரை

**அலகு 5:** இலக்கிய வரலாறு

1. நாயக்கர் காலம் - சிற்றிலக்கியங்கள், உரையாசிரியர்கள், இலக்கிய வரலாறு ஸ்ரீ சந்திரன் பக்கம 205 முதல் 241 வரை

கற்றலின் பயன்:

சங்க இலக்கியம் பற்றி அறிதல், தமிழ்க் காப்பியங்கள் பற்றி அறிதல், உரையாசிரியர்கள் தமிழுக்கு செய்த தொண்டினை அறிந்து பயன் பெறுதல்.

பாடநூல்

1. தமிழ் இலக்கிய வரலாறு - ஜெயம், ஜனதா பதிப்பகம்.
2. பெரியபுராணம் - தருமையாதீனம், மயிலாடுதுறை
3. சங்க இலக்கியம் - உ.வே.சா. அண்ணாசாலை பதிப்பகம்
4. மொழித்திறன் - முனைவர் மு.வ. பாரிநிலையம்.

**அலகு;-1** செய்யுள் பகுதி

## சங்க இலக்கியங்கள்

**சங்கம்** என்ற ஓர் அமைப்பு இருந்ததாகப் பல்வேறு ஆதாரங்கள் கிடைத்தாலும், சங்கத்திலே அமர்ந்து புலவர்கள் பாடிய பாடல்கள் சிலவாகத் தான் இருக்க முடியும். பெரும்பாலான பாடல்கள், பல்வேறு இடங்களில், பல்வேறு காலங்களில், பல்வேறு புலவர்களால் பாடப்பட்டவையாகத்தான் இருக்க வேண்டும். அவை கி.மு.500 முதல் கி.பி.200 முடிய உள்ள காலத்தில் பாடப்பட்டவையாக இருக்கலாம்.

சங்கப் பாடல்கள் **எட்டுத்தொகை** நூல்கள் என்றும், **பத்துப்பாட்டு** என்றும் பிரிக்கப்பட்டிருத்தல் காணத்தக்கது ஏராளமான பாடல்கள் ஓலைச் சுவடிகளில் இருந்து அழிந்துபோக, எஞ்சியவற்றைத் தொகுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் அக்காலத்து அரசர்கள் புலவர்களின் துணையோடு செயல்பட்டனர். அவ்வாறு தொகுக்கப்பட்டவையே **எட்டுத்தொகை**யும், **பத்துப்பாட்டு**மாகும். இக்காலப்பகுதியில் படைக்கப்பட்ட இலக்கண நூல்களுள் **தொல்காப்பியம்** மட்டுமே கிடைத்துள்ளது.

எட்டுத் தொகுதிகளாகத் தொகுக்கப்பட்ட எட்டு நூல்கள் **எட்டுத்தொகை** என்றும், பத்துப் பெரிய பாடல்கள் **பத்துப் பாட்டு** என்றும் பெயர் பெற்றன.

எட்டுத்தொகை நூல்கள்

எட்டுத்தொகையில் உள்ளவை **எட்டு**, **தொகை** நூல்களாகும். இவற்றைக் குறிக்கும் பழம் பாடல் ஒன்று உள்ளது. இப்பாடலை மனப்பாடம் செய்து கொண்டால் இந்நூல்களின் பெயர்களை நாம் நன்கு நினைவில் வைத்துக் கொள்ளலாம்.

***நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல் கற்றறிந்தார் ஏத்தும் கலியொடு அகம்புறம் என்று இத்திறத்த எட்டுத் தொகை.***

இவற்றுள் **நற்றிணை,குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு** ஆகியவை அகநூல்களாகும். **பதிற்றுப்பத்து**ம், **புறநானூறு**ம் புறநூல்களாகும். **பரிபாடல்** அகமும், புறமும் கலந்த நூலாகும்.

### 1.3.3 பத்துப்பாட்டு

சிறிய பாடல்கள் எல்லாம் **எட்டுத்தொகை**யுள் அடங்கிவிட, பத்துப் பெரிய பாடல்களின் தொகுதி **பத்துப்பாட்டு** எனப் பெயரிடப்பட்டது

இப்பத்துப் பாடல்களையும் குறிக்கும் பழம்பாடல் ஒன்று உள்ளது.

***முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை***
***பெருகு வளமதுரைக் காஞ்சி - மருவினிய***
***கோலநெடு நல்வாடை கோல்குறிஞ்சி பட்டினப்***
***பாலை கடாத்தொடும் பத்து***

இவ்வெண்பாவில் உள்ள **முருகு** என்று கூறப்படுகின்ற **திருமுருகாற்றுப்படை**, **பொருநாறு** என்று சொல்லப்படுகின்ற **பொருநர் ஆற்றுப்படை**, **பாணிரண்டு** என்று கூறப்படுகின்ற **சிறுபாணாற்றுப்படை**, **பெரும்பாணாற்றுப்படை**, **கடாம்** எ ன்று அழைக்கப்படுகின்ற **மலைபடுகடாம்** ஆகியவை ஆற்றுப்படை என்னும் இலக்கிய வகையைச் சார்ந்தவை. இவை புறப்பாடல்கள் ஆகும். இவை தவிர **மதுரைக்காஞ்சி**யும் புறப்பாடல் ஆகும்.

**முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை** ஆகியவை அகப்பாடல்களாகும். **நெடுநல்வாடை** அக இலக்கியமா, புற இலக்கியமா என்ற ஆய்வு இன்னும் நிகழ்ந்து வருகின்றது.

இவற்றுள் **முல்லைப்பாட்டு** 103 அடிகளை உடைய மிகச் சிறிய பாடலாகும். **மதுரைக் காஞ்சி** 782 அடிகளை உடைய மிகப் பெரிய பாடலாகும்.

## குறுந்தொகை பாடல்**கள்**

குறுந்தொகை அகத்திணைப் பாடல்களைக் கொண்டது. இவை தலைவன், தலைவி, தோழி, நற்றாய், செவிலி ஆகியோரின் கூற்றுகளாக அமையும்.

### கொங்கு தேர் வாழ்க்கை

கொங்கு தேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி!
காமம் செப்பாது, கண்டது மொழிமோ:
பயிலியது கெழீஇய நட்பின், மயில் இயல்,
செறி எயிற்று, அரிவை கூந்தலின்
நறியவும் உளவோ, நீ அறியும் பூவே?

என்பது, இயற்கைப்புணர்ச்சிக்கண் இடையீடுபட்டு நின்ற தலைமகன், தலைமகளை நாணின் நீக்குதற்பொருட்டு 'மெய்தொட்டுப் பயிறல்' முதலாயின அவண்மாட்டு நிகழ்த்திக் கூடித் தனது அன்புதோன்ற நலம் பாராட்டியது.

**பாடியவர் : <u>இறையனார்</u>**

அவனைப் பார்த்த அவள் நாணி ஒதுங்கினாள். அவன் அவளைத் தொடவேண்டும். அதற்கு ஒரு சாக்குபோக்காகச் சொல்வதாக அமைந்துள்ள பாடல் இது. தும்பியே! உனக்கு அழகிய சிறகுகள். உனது வாழ்க்கை தேனைத் தேடி எடுத்துக்கொள்வது. உனக்குத் தெரியும் எந்தப் பூ அதிக மணம் என்று. இவள் தலையில் சூடியுள்ள பூவை மொய்க்கும் ஆசையால் சொல்லிவிடாதே. இவள் கூந்தலைக் காட்டிலும் நல்ல மணமுள்ள பூ நீ அறிந்தது உண்டா?

இவன் அரிவை. செறிந்த எயிறுகளில் புன்னகை பூக்கிறாள். மயில் போல் மெல்லமெல்ல ஆடி அசைகிறாள். (விலக மனமில்லை) இவள் என்னிடம் ஏதோ பயின்றிருக்கிறாள். அது

ஒட்டுறவு உள்ள நட்பாகத் தெரிகிறது. (அது உடலுறவாக மாறவேண்டும்)

2. குறிஞ்சி - தலைவி கூற்று

நிலத்தினும் பெரிதே வானினு முயர்ந்தன்று
நீரினு மாரள வின்றே சாரற்
கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தே னிழைக்கு நாடனொடு நட்பே.

என்பது தலைமகன் சிறைப்புறமாக, அவன் வரைந்துகொள்வது வேண்டித் தோழி இயற்பழித்தவழித் தலைமகள் இயற்பட மொழிந்தது.

**பாடியவர் :** தேவகுலத்தார்

அவன் அவளுக்காக வெளியில் காத்திருக்கிறான். திருமணம் செய்துகொண்டு அவளை அடையவேண்டும் என்று விரும்பிய தோழி அவனது களவொழுக்கம் பற்றி இழிவாகப் பேசுகிறாள். தலைவி அவ்வாறு பேசக்கூடாது என்று கூறும் செய்தி இது; நாடனுக்கும் எனக்கும் உள்ள நட்பு நிலத்தைக் காட்டிலும் மிகுதியான நீளஅகலம் கொண்டது. வானைக் காட்டிலும் உயர்ந்தது. கடல் நீரைக் காட்டிலும் ஆழமானது. மலைநீரைக் காட்டிலும் தூய்மையானது. எனவே பழிக்காதே. மலைத் தேனீ குறிஞ்சிப் பூவில் தேனை எடுத்துக்கொண்டுபோய் என்ன செய்யும்? கூடுதானே கட்டும். (அதுபோல அவன் என்னைத் தன் இல்லத்துக்குக் கொண்டுசெல்வான்.

3. பாலை

உள்ளார்கொல்லோ-தோழி! கள்வர்
பொன் புனை பகழி செப்பம் கொண்மார்,
உகிர் நுதி புரட்டும் ஓசை போல,

செங் காற் பல்லி தன் துணை பயிரும்
அம் காற் கள்ளிஅம் காடு இறந்தோரே?

**பாடியவர் :** பாலைபாடிய பெருங்கடுங்கோ

தலைவி தன் தோழியிடம் கூறுகிறாள்.

அவர் கள்ளிக் காட்டின் வழியே செல்கிறார். கள்ளி தன் வேரை ஊன்றிப் பதித்துக்கொண்டுள்ள காடு அது. அங்குப் பல்லி தன் துணைப்பல்லியை அழைக்கும். அது சிவந்த காலை உடைய காட்டுப்பல்லி.அந்தப் பல்லி துணையை அழைக்கும் ஓசையானது, கள்வர் இரும்பாலான தன் அம்புமுனையை விரல் நகத்தில் புரட்டித் தீட்டும்போது தோன்றும் ஒலி போல் கேட்கும். இப்படி ஓசை கேட்கும்போது அவர் நம்மை (அவரது துணையை) நினைக்கமாட்டாரோ?

**பாடியவர் :** பாலைபாடிய பெருங்கடுங்கோ

உள்ளார்கொல்லோ-தோழி! கள்வர்
பொன் புனை பகழி செப்பம் கொண்மார்,
உகிர் நுதி புரட்டும் ஓசை போல,
செங் காற் பல்லி தன் துணை பயிரும்
அம் காற் கள்ளிஅம் காடு இறந்தோரே?

## 4. பாலை - தலைவி கூற்று

**பாடியவர்:** கோப்பெருஞ்சோழன்

பொருள் தேடுவதற்காகத் தலைவன் தலைவியைவிட்டுப் பிரிந்து சென்றிருக்கிறன். தன் காதலனைப் பிரிந்திருக்கும் தலைவியைக் காண அவள் தோழி வருகிறாள். தலைவன் பிரிந்து சென்றது அறிவுடைய செயல் அன்று என்று தலைவி தோழியிடம் கூறுகிறாள்

***அருளும் அன்பும் நீக்கித் துணைதுறந்து***
***பொருள்வயிற் பிரிவோர் உரவோர் ஆயின்***
***உரவோர் உரவோர் ஆக***
***மடவம் ஆக மடந்தை நாமே.***

தோழி!, அருளையும் அன்பையும் துறந்து, தம் துணைவியைப் பிரிந்து, பொருள் தேடும் பொருட்டு, சென்ற நம் தலைவர், அறிவுடையவராயின், அந்த ஆற்றலை உடைய அவர் அறிவுடையவராகவே இருக்கட்டும். அவரைப் பிரிந்திருத்தற்குரிய ஆற்றல் இல்லாத நாம், அறிவில்லாதவர்களாகவே இருப்போம்.

தன் காதலன் பொருள் தேடும் பொருட்டுத் தன்னைவிட்டுப் பிரிந்து சென்றதைத் தலைவி அறிவுடைய செயலாகக் கருதவில்லை. ஆகவே, வஞ்சப் புகழ்ச்சியாக, தன் காதலனை அறிவிற் சிறந்தவனாகக் கூறுகிறாள்.

5. மருதம் - தலைவி கூற்று

மள்ளர் குழீஇய விழவி னானும்
மகளிர் தழீஇய துணங்கை யானும்
யாண்டுங் காணேன் மாண்டக் கோனை
யானுமோ ராடுகள மகளே யென்கைக்
கோடீ ரிலங்குவளை நெகிழ்த்த
பீடுகெழு குரிசிலுமோ ராடுகள மகனே.

என்பது, *நொதுமலர் வரைவுழித் தோழிக்குத் தலைமகள் அறத்தொடு நின்றது.*

**பாடியவர் :** ஆதிமந்தியார்.

ஆட்டக்காரி என்று நாம் கூறும் ஆடுகளமகள் ஒருத்தியின் காதல் கதை இது. உறவுக்கார நொதுமலர் அவளை மணக்கப் பெண் கேட்டனர். அவளோ தன் காதலனாகிய அவனை மணக்க

எண்ணிக்கொண்டிருக்கிறாள். தன் எண்ணத்தைத் தோழியிடம் சொல்லி வெளிப்படுத்துகிறாள். அவனை(என்காதலனை) மள்ளர் விழாக் கொண்டாடும் இடங்களிலும், மள்ளர் மகளிர் துணங்கை ஆடும் இடங்களிலும் அவனைத் தேடினேன். எங்கும் அவனைக் காணமுடியவில்லை. அவன் மாண்புள்ளவன். என்னை மணக்கும் தகுதி உள்ளவன். நான் ஓர் ஆடுகள மகள். அவனும் ஓர் ஆடுகள மகன். அவன் பெருமை மிக்கவன். ஆடுகளக் கூட்டத்துக்குக் குரிசில்(தலைவன்). அவனை நினைத்து என் கைவளையல் நழுவுகிறது.

மள்ளர் = உழவர். மள் < மண் - மண்ணைப் பிணைந்து தொழில் புரிவோர்.

துணங்கை = வட்டமாக நின்று கை கோத்துக்கொண்டு ஆடும் பொழுதுபோக்கு விளையாட்டு நடனம்.

6. குறிஞ்சி - தலைவன் கூற்று

யாயு ஞாயும் யாரா கியரோ
எந்தையு நுந்தையு மெம்முறைக் கேளிர்
யானு நீயு மெவ்வழி யறிதும்
செம்புலப் பெயனீர் போல
அன்புடை நெஞ்சந் தாங்கலந் தனவே.

**பாடியவர் :** செம்புலப் பெயனீரார். (தன் பாடல் தொடரால் பெயர் பெற்றுள்ள புலவர்)
]

என் தாயும் உன் தாயும் எவ்வாறு உறவினர்? என் தந்தையும் உன் தந்தையும் எம்முறையில் உறவானவர்கள்? எந்த உறவின் வழியாக நீயும் நானும் ஒருவரை ஒருவர் அறிந்து கொண்டோம்? செம்மண்ணில் பெய்த மழை நீர் எவ்வாறு அம்மண்ணோடு ஒன்று கலந்து பிரிக்கமுடியாதவாறு ஆகிவிடுகிறதோ;அதுபோன்று நம் அன்பு நெஞ்சங்களும் ஒன்றாய்க்கலந்தனவே...

7. குறுந்தொகை - 49

தலைவி கூற்று
(தலைமகன் விலைகளிடம் சென்று தலைவியை பிரிந்து மீண்டு வந்த காலத்து முன்பிருந்த ஆற்றாமை நீங்கி, அவனோடு அளவளாவி, “நாம் பிறவிதோறும் அன்புடைய கணவனும் மனைவியுமென இருப்போமாக!” என்று தலைவி கூறியது.)

நெய்தல் திணை - பாடலாசிரியர் அம்மூவனார்.

அணிற்பல் லன்ன கொங்குமுதிர் முண்டகத்து

மணிக்கே ழன்ன மாநீர்ச் சேர்ப்ப

இம்மை மாறி மறுமை யாயினும்

நீயா கியரென் கணவனை

யானா கியர்நின் னெஞ்சுநேர் பவளே.

- அம்மூவனார்

அணிலின் பல்லைப் போன்ற தாது முதிர்ந்த கூரான முள்ளிச்செடியையும், நீலமணி போன்ற கரிய நீரையும் உடைய கடற்கரை உடைய தலைவா..இப்பிறப்பு நீங்கி, நமக்கு வேறு பிறப்பு உண்டாயினும் என் தலைவன் இப்பொழுது என்னிடம் அன்பு செய்த்தொழுகும் நீயே ஆகுக! உன் மனதிற்கேற்ற காதலி இப்போது உன் நெஞ்சு கலந்தொழுகும் நானே ஆகுக!

## 8. **குறிஞ்சி**

**கருங்கட் தாக்கலை பெரும்பிறிது உற்றென,**

**கைம்மை உய்யாக் காமர் மந்தி**
**கல்லா வன் பறழ் கிளைமுதல் சேர்த்தி,**
**ஓங்கு வரை அடுக்கத்துப் பாய்ந்து உயிர் செகுக்கும்**
**சாரல் நாட! நடு நாள்**
**வாரல்; வாழியோ! வருந்துதும் யாமே! -- தொடு**

**பாடியவர் : கடுந்தோட் கரவீரன்**
**தோழி இரவுக்குறி மறுத்தது.**

**தன் ஆண்குரங்கு இறந்துவிட்டதால் பெண்குரங்கு கைமையை விரும்பாமல் (கிளைக்குக் கிளை தாவுவதற்குக்) கற்காத தன் குட்டியைக் கிளைக்கு இடையில் வைத்துவிட்டு உயர்ந்த மலைமுகட்டின் மீது ஏறிப் பள்ளத்தில் பாய்ந்து (படம் - மரத்திலிருந்து பாயும் குரங்கு) தன் உயிரை மாய்த்துக்கொள்ளும் மலைநாடனே! நள்ளிரவில் வராதே. ஏதாவது உனக்கு நேர்ந்துவிடுமோ என வருந்துகிறோம். (நேர்ந்தால் உயிர் விடுவோம். பகலில் வரலாம் என்பது பொருள்)**

## 9. தோழி கூற்று

**திணை:** பாலை.
**கூற்று:** புணர்ந்துடன் போக்கினைத் தலைமகள் ஒழியப் போகலுற்ற தலைமகற்குத் தோழி சொல்லியது.
**கூற்று விளக்கம்:** தலைவன் தலைவியைவிட்டுப் பிரிந்து செல்லும் நிலையில் இருக்கிறான். தலைவியையும் உடனழைத்துச் செல்லுமாறு தோழி கூறுகிறாள். "நான் செல்லும் வழி கொடுமையானது.", என்று கூறித் தலைவியை அழைத்துப் போகத் தலைவன் தயங்குகிறான். அதைக் கேட்ட தோழி, " உன்னைவிட்டுப் பிரிந்திருந்தால் தலைவிக்கு வீடு இனிமையானதாகுமோ?" என்று தோழி கேட்கிறாள்.

***உமணர் சேர்ந்து கழிந்து மருங்கி னகன்றலை***
***ஊர்பாழ்த் தன்ன ஓமையம் பெருங்காடு***

***இன்னா என்றி ராயின்***
***இனியவோ பெரும தமியோர்க்கு மனையே.***

**பாடியவர்:** பாலைபாடிய பெருங்கடுங்கோ.

**கொண்டு கூட்டு:** பெரும! உமணர் சேர்ந்து கழிந்து மருங்கின் அகன்றலை ஊர் பாழ்த்தன்ன, ஓமையம் பெருங்காடு இன்னா என்றிராயின், தமியோர்க்கு மனை இனியவோ?

தலைவ! உப்பு வணிகர்களான உமணர்கள் கூட்டமாகத் தங்கியிருந்து, பிறகு அங்கிருந்து அகன்று சென்ற அகன்ற இடம் பாழான ஊர்போல் தோன்றும். அதுபோல் தோற்றமளிக்கும் ஓமை மரங்கள் நிறைந்த பெரிய காடுகள் உள்ளன. அந்த வழி மிகவும் கொடுமையானது என்று நீங்கள் கூறுகின்றீர் எனில், உங்களைவிட்டு வீட்டில் தனியாக இருந்தால், தலைவிக்கு வீடு இனிமையானதாக இருக்குமோ?

## 10. **செவிலித்தாய் கூற்று**

**பாடியவர்:** கூடலூர் கிழார்.
**திணை:** முல்லை.
**கூற்று:** கடிநகர்ச் சென்ற செவிலித்தாய் நற்றாய்க்கு உரைத்தது.

தலைவி ஒரு செல்வந்தர் வீட்டுப் பெண். அவள் தன் வீட்டில் செல்லமாக வளர்ந்தவள். அவளுக்குச் சமைத்துப் பழக்கமில்லை. திருமணம் முடிந்தவுடன் தன் கணவனுடன் தனிக்குடித்தனம் போய்விட்டாள். ”அவளுக்குச் சமைக்கத் தெரியாதே! அவள் என்ன செய்கிறாளோ? எப்படிக் குடும்பம் நடத்துகிறாளோ?” என்று தலைவியின் தாய் வருந்துகிறாள். அப்பொழுது அங்கு வந்த தலைவியின் செவிலித்தாய் ( தலைவியை வளர்த்தவள்) தான் போய்த் தலைவி எப்படி இருக்கிறாள் என்று பார்த்துவருவதாகத் தலைவியின் தாயிடம் சொல்லிவிட்டு, தலைவியின் வீட்டிற்கு போகிறாள். அங்கு, தலைவி மோர்க்குழம்பு செய்வதையும், கணவனுக்கு அவள் அதைப் பரிமாறும் காட்சியையும், ”நீ சமைத்த மோர்க்குழம்பு மிகவும் இனிமையாக இருக்கிறது” என்று சொல்லி, மகிழ்ச்சியோடு அவள் கணவன் உண்ணுவதையும், கணவனின் பாராட்டுதலைக் கேட்ட

தலைவி புன்முறுவல் பூப்பதையும் பார்த்த செவிலித்தாய் அந்தக் காட்சி யைத் தலைவியின் தாயிடம் கூறுகிறாள்.

*முளிதயிர் பிசைந்த காந்தண் மெல்விரல்*
*கழுவுறு கலிங்கங் கழாஅ துடீஇக்*
*குவளை யுண்கண் குய்ப்புகை கழுமத்*
*தான்றுழந் தட்ட தீம்புளிப் பாகர்*
*இனிதெனக் கணவ னுண்டலின்*
*நுண்ணிதின் மகிழ்ந்தன் றொண்ணுதல் முகனே.*

கட்டித் தயிரைப் பிசைந்த, காந்தள் மலரைப் போன்ற மெல்லியவிரல்களைத் துடைத்துக் கொண்ட ஆடையைத் துவைக்காமால் உடுத்திக்கொண்டு, குவளை மலரைப் போன்ற, மைதீட்டிய கண்களில், தாளிப்பின் புகை நிறைய, தானே துழாவிச் சமைத்த, இனிய, புளிப்பையுடைய மோர்க்குழம்பைத் தன் கணவன், இனிதென்று உண்பதனால், தலைவியின் முகம் மிக நுட்பமாகத் தன் மகிழ்ச்சியை வெளிப்படுத்தியது.

தயிர் கட்டியாக இருந்ததால், தலைவி மோர்க்குழம்பு செய்யும் பொருட்டுத் தன் மெல்லிய விரல்களால் துழாவித் தாளிதம் செய்தாள். விரைவில் சமைக்க வேண்டுமென்று விரும்பியதால் தயிர் பிசைந்த கையைத் துடைத்த ஆடையை மாற்றிக்கொள்வதற்குத் தலைவி மறந்தாள். அவள் சமைத்த உணவைத் தன் கணவன் “இனிது” என்று விரும்பி உண்டதால், தலைவியின் அகமகிழ்ச்சியை அவள் முகம் வெளிப்படுத்தியது. இயல்பாகவே அழகாக இருந்த நெற்றி, மகிழ்ச்சியால் மேலும் அழகாகத் தோன்றியது.

## புறநானூறு

1. நீரும் நிலனும்!

பாடியவர்; குடபுலவியனார்.
பாடப்பட்டோன் : பாண்டியன் நெடுஞ்செழியன்.
திணை: பொதுவியல்.
துறை: முதுமொழிக் காஞ்சி : பொருண்மொழிக் காஞ்சி எனவும் பாடம்.

முழங்கு முந்நீர் முழுவதும் வளைஇப்
பரந்துபட்ட வியன்ஞாலம்
தாளிற் றந்து தம்புகழ் நிறீஇ
ஒருதா மாகிய வுரவோ ரும்பல்
ஒன்றுபத் தடுக்கிய கோடிகடை யிரீஇய

பெருமைத் தாகநின் னாயு டானே
நீர்த்தாழ்ந்த குறுங்காஞ்சிப்
பூக்கதூஉ மினவாளை
நுண்ணாரற் பருவராற்
குரூஉக்கெடிற்ற குண்டகழி

வானுட்கும் வடிநீண்மதில்
மல்லன்மூதூர் வயவேந்தே
செல்லு முலகத்துச் செல்வம் வேண்டினும்
ஞாலங் காவலர் தோள்வலி முருக்கி
ஒருநீ யாகல் வேண்டினுஞ் சிறந்த

நல்லிசை நிறுத்தல் வேண்டினு மற்றதன்
தகுதி கேளினி மிகுதி யாள
நீரின் றமையா யாக்கைக் கெல்லாம்
உண்டி கொடுத்தோ ருயிர்கொடுத் தோரே
உண்டி முதற்றே யுணவின் பிண்டம்

உணவெனப் படுவது நிலத்தொடு நீரே
நீரு நிலனும் புணரி யோரீண்
டுடம்பு முயிரும் படைத்திசி னோரே

வித்திவா னோக்கும் புன்புலங் கண்ணகன்
வைப்பிற் றாயினு நண்ணி யாளும்

இறைவன் றாட்குத வாதே யதனால்
அடுபோர்ச் செழிய விகழாது வல்லே
நிலனெளி மருங்கி னீர்நிலை பெருகத்
தட்டோ ரம்ம விவட்டட் டோரே
தள்ளா தோரிவட் டள்ளா தோரே

ஒலிக்கின்ற கடலால் முழுதும் சுற்றிச் சூழப்பட்டு பரந்து கிடக்கின்ற அகன்ற உலகத்தைத்
தனது முயற்சியால் உன்னுடைய புகழை இவ்வுலகத்தில் நிலைநிறுத்தி ஒன்றாக
தாமே ஆட்சி செய்த வலியவர்களின் வழித்தோன்றலே!

ஒன்றைப் பத்து முறையாக அடுக்கிய கோடி என்னும் எண்ணைக் கடைசியாக இருத்திய பெருமையுடைய எண் அளவுக்கு உனது வாழ்நாள் பெருகட்டும்.
நீரின் மட்டத்திற்குத் தாழ்ந்த சிறிய காஞ்சியின் பூக்களைக் கவரும் இனமாகிய வாளை மீன்களும், நுண்ணிய ஆரல் மீன்களும்,ஒளிறும் கெளிறு மீன்களும் நிறைந்த ஆழமான அகழியினையும் வானம் அஞ்சும் அளவு உயர்ந்த அழகிய அரண்களையும், வளமும் பொலிவும் உள்ள பழமையான ஊரினையுடைய வலிமையான வேந்தே!உன் இறப்பிற்குப் பின் நீ போக விரும்பும் மறுமைப் பேறாகிய சொர்க்க உலகத்தை நுகரும் செல்வம் விரும்பினும், உலகத்தைக் காக்கும் பிற வேந்தர் தோள் வலிமையைக் கெடுத்து நீ ஒருவனே தலைவனாவதை விரும்பினும்,மிக்க நல்ல புகழை இவ்வுலகத்தே நிறுத்துதலை விரும்பினும் அத்தகைய விருப்பத்தை நிறைவேற்ற நீ செய்ய வேண்டிய தகுந்த செயல்களை இப்பொழுது கேட்பாயாக பெரியோனே!

நீர் இன்றி அமையாத இவ்வுலகில் வாழும் உடம்பிற்கெல்லாம் உணவால் வளர்க்கப்பட்ட உடம்பு உணவையே பொறுத்து என்பதால், உணவு கொடுத்தவர்கள் உயிரைக் கொடுத்தோர் ஆவர்

எனப்படுகிறது.
ஆதலால் உணவென்று சொல்லப்படுவது நிலத்தோடு கூடிய நீர் நீரில்லா இடத்தில் அந்நீரையும், நிலத்தையும் ஒன்றாக இணைத்துச் செயல் படுத்தியவர்கள்
இவ்வுலகத்தில் உடம்பையும் உயிரையும் படைத்தவர்களாவர்.

நெல் முதலான தானியங்களை விதைத்து மழை வருவாய் ஒன்றையே பார்த்திருக்கும் வானவாரித் தரிசு நிலமானது இடம் அகன்ற நிலப்பரப்பாயினும் பொருந்தியாளும் அரசனது முயற்சிக்குப் பயன்படாது. ஆதலால் கொல்லும் போர்த் தொழிலை உடைய செழியனே!

இதனை அலட்சியப்படுத்தாது, விரைவில் நிலம் பள்ளமாக உள்ள குழிந்த இடங்களில் நெடிய நீண்ட கரையெடுத்து, நீர்நிலை அமைத்து நீரைத் தேக்கி வேண்டுமளவு பயன்படுமாறு பெருகச் செய்.
அப்படிச் செய்தோர் தாம் செல்லும் உலகத்து அறம், பொருள், இன்பம் மூன்றினையும் இவ்வுலகத்து தம் பேரோடு தளைக்கச் செய்தோர் ஆவர்.
அந்நீரைப் பெருகச் செய்யாதோர் இவ்வுலகத்து தம் பெயரைத் தளைக்கச் செய்யாதோர் ஆவர்.

### 3. பாடியவர்; ஒக்கூர் மாசாத்தியார்.

கெடுக சிந்தை, கடிது இவள் துணிவே,
மூதின் மகளிர் ஆதல் தகுமே,
மேல் நாள் உற்ற செருவிற்கு, இவள் தன் ஐ
யானை எறிந்து களத்து ஒழிந்தன்னே,
நெருநல் உற்ற செருவிற்கு, இவள் கொழுநன் . . . . [05]

பெரு நிரை விலக்கி ஆண்டுப்பட்டனனே,
இன்றும் செருப்பறை கேட்டு விருப்புற்று, மயங்கி
வேல் கைக் கொடுத்து வெளிது விரித்து உடீஇப

பாறு மயிர்க் குடுமி எண்ணெய் நீவி
ஒரு மகன் அல்லது இல்லோள்

செருமுக நோக்கிச் செல்க, என விடுமே.

கெடுக இவளது சிந்தை. கடுமையானது இவளது துணிவு. இவள் முதிய மறக்குடியின் பெண்ணாக இருப்பதற்கு தகுந்தவள் தான். முந்தா நாள் நிகழ்ந்த போரில் இவள் தந்தை யானையைக் கொன்று களத்தில் உயிர் நீத்தான். நேற்று நிகழ்ந்த போரில் இவளது கணவன் பகைவரின் பெரும் பசுக் கூட்டத்தைக் கவரும் முயற்சியைத் தடுத்துக் களத்தில் உயிர் துறந்தான். இன்று தெருவில் பறையின் ஒலியைக் கேட்டதும், விருப்பத்தால் மயங்கி, தன் ஒரே மகனுக்கு வெண்ணிற ஆடையை உடுத்தி, அவனுடைய உலர்ந்த குடுமியில் எண்ணையைத் தடவிச் சீவி முடித்து, அவன் கையில் வேலைக் கொடுத்துப் 'போர்க் களத்தை நோக்கி செல்க' என்று அனுப்பினாள்.

**அலகு;- 2** காப்பியம்

## சிலப்பதிகாரம்

### வழக்குரை காதை

தன் கணவன் கோவலன் பாண்டிய மன்னனின் தவறான ஆணைக்கிணங்கக் கொல்லப்பட்டதை அறிந்த கண்ணகி, பாண்டிய மன்னனிடம் வழக்குரைத்து நீதி கேட்கின்றாள். அவளுடைய வாதத்தில் உண்மை இருப்பதை உணர்ந்து, தான் நீதி தவறியதை எண்ணி மனம் கலங்கி, பாண்டிய மன்னன் உயிர் துறக்கின்றான். மன்னனோடு அரசியும் உயிர் துறக்கின்றாள். சினம் தணியாத கண்ணகி மதுரை மாநகரை எரிக்கின்றாள். இத்தகு செய்திகளை இக்காதை விவரிக்கின்றது.

### வழக்குரை காதை

கோப்பெருந்தேவியின் தீக் கனவு
ஆங்கு,
'குடையொடு கோல் வீழ நின்று நடுங்கும்
கடை மணியின் குரல் காண்பென்-காண், எல்லா!
திசை இரு-நான்கும் அதிர்ந்திடும்; அன்றி,
கதிரை இருள் விழுங்கக் காண்பென்-காண், எல்லா!
விடும் கொடி வில் இர; வெம் பகல் வீழும்
கடுங் கதிர் மீன்: இவை காண்பென்-காண், எல்லா!'
கெடுதிக்குக் காரணம்
செங்கோலும், வெண்குடையும்,
செறி நிலத்து மறிந்து வீழ்தரும்;
நம் கோன்-தன் கொற்ற வாயில்
மணி நடுங்க, நடுங்கும் உள்ளம்;
இரவு வில் இடும்; பகல் மீன் விழும்;
இரு-நான்கு திசையும் அதிர்ந்திடும்;
வருவது ஓர் துன்பம் உண்டு;
மன்னவற்கு யாம் உரைத்தும்' என-

ஆடி ஏந்தினர், கலன் ஏந்தினர்,
அவிர்ந்து விளங்கும் அணி இழையினர்;
கோடி ஏந்தினர், பட்டு ஏந்தினர்,
கொழுந் திரையலின் செப்பு ஏந்தினர்,
வண்ணம் ஏந்தினர், சுண்ணம் ஏந்தினர்,
மான்மதத்தின் சாந்து ஏந்தினர்,
கண்ணி ஏந்தினர், பிணையல் ஏந்தினர்,
கவரி ஏந்தினர், தூபம் ஏந்தினர்:
கூனும், குறளும், ஊமும், கூடிய
குறுந் தொழில் இளைஞர் செறிந்து சூழ்தர;
நரை விரைஇய நறுங் கூந்தலர்,
உரை விரைஇய பலர் வாழ்த்திட
'ஈண்டு நீர் வையம் காக்கும்
பாண்டியன் பெருந்தேவி! வாழ்க' என,
ஆயமும் காவலும் சென்று
அடியீடு பரசி ஏத்த;
கோப்பெருந்தேவி சென்று தன்
தீக் கனாத் திறம் உரைப்ப-
அரிமான் ஏந்திய அமளிமிசை இருந்தனன்,
திரு வீழ் மார்பின் தென்னவர் கோவே-
கண்ணகி பெருஞ் சீற்றத்தோடு அரசனை நோக்கிச் செல்லல்
இப்பால்,
'வாயிலோயே! வாயிலோயே!
அறிவு அறைபோகிய பொறி அறு நெஞ்சத்து,
இறை முறை பிழைத்தோன் வாயிலோயே!
"இணை அரிச் சிலம்பு ஒன்று ஏந்திய கையள்,
கணவனை இழந்தாள், கடைஅகத்தாள்" என்று
அறிவிப்பாயே! அறிவிப்பாயே!' என-
காவலோன் மருண்டு மன்னனிடம் கூறுதல்
வாயிலோன், 'வாழி! எம் கொற்கை வேந்தே, வாழி!
தென்னம் பொருப்பின் தலைவ, வாழி!
செழிய, வாழி! தென்னவ, வாழி!
பழியொடு படராப் பஞ்சவ, வாழி!
அடர்த்து எழு குருதி அடங்காப் பசுந் துணிப்
பிடர்த் தலைப் பீடம் ஏறிய மடக்கொடி,

வெற்றி வேல் தடக்கைக் கொற்றவை, அல்லள்;
அறுவர்க்கு இளைய நங்கை, இறைவனை
ஆடல் கண்டருளிய அணங்கு, சூர் உடைக்
கானகம் உகந்த காளி, தாருகன்
பேர் உரம் கிழித்த பெண்ணும், அல்லள்;
செற்றனள் போலும்; செயிர்த்தனள் போலும்;
பொன் தொழில் சிலம்பு ஒன்று ஏந்திய கையள்;
கணவனை இழந்தாள் கடைஅகத்தாளே;
கணவனை இழந்தாள் கடைஅகத்தாளே' என-
'வருக, மற்று அவள் தருக, ஈங்கு' என-

கண்ணகி தன்னைப் பற்றிக் கூறுதல்
வாயில் வந்து, கோயில் காட்ட,
கோயில் மன்னனைக் குறுகினள் சென்றுழி-
'நீர் வார் கண்ணை, எம் முன் வந்தோய்!
யாரையோ, நீ? மடக்கொடியோய்!' என-
'தேரா மன்னா! செப்புவது உடையேன்;
எள் அறு சிறப்பின் இமையவர் வியப்ப,
புள் உறு புன்கண் தீர்த்தோன்; அன்றியும்,
வாயில் கடை மணி நடு நா நடுங்க,
ஆவின் கடை மணி உகு நீர் நெஞ்சு சுட, தான் தன்
அரும்பெறல் புதல்வனை ஆழியின் மடித்தோன்
பெரும் பெயர்ப் புகார் என் பதியே; அவ் ஊர்,
ஏசாச் சிறப்பின், இசை விளங்கு பெருங்கொடி
மாசாத்து வாணிகன் மகனை ஆகி,
வாழ்தல் வேண்டி, ஊழ்வினை துரப்ப,
சூழ் கழல் மன்னா! நின் நகர்ப் புகுந்து, இங்கு
என் கால் சிலம்பு பகர்தல் வேண்டி, நின்பால்
கொலைக்களப் பட்ட கோவலன் மனைவி;
கண்ணகி என்பது என் பெயரே' என-

தன் கணவன் கள்வன் அல்லன் எனச் சிலம்பினை உடைத்தல்
'பெண் அணங்கே!
கள்வனைக் கோறல் கடுங் கோல் அன்று;
வெள் வேல் கொற்றம்-காண்' என- ஒள்-இழை,

‘நல் திறம் படராக் கொற்கை வேந்தே!
என் கால் பொன் சிலம்பு மணி உடை அரியே’ என-
‘தேமொழி! உரைத்தது செவ்வை நல் மொழி;
யாம் உடைச் சிலம்பு முத்து உடை அரியே;
தருக’ எனத் தந்து, தான் முன் வைப்ப-
கண்ணகி அணி மணிக் கால் சிலம்பு உடைப்ப,
மன்னவன் வாய்முதல் தெறித்தது, மணியே- மணி கண்டு,
தாழ்ந்த குடையன், தளர்ந்த செங்கோலன்,
‘பொன் செய் கொல்லன்-தன் சொல் கேட்ட
யனோ அரசன்? யானே கள்வன்;
மன்பதை காக்கும் தென் புலம் காவல்
என் முதல் பிழைத்தது; கெடுக என் ஆயுள்! என
மன்னவன் மயங்கி வீழ்ந்தனனே- தென்னவன்
கோப்பெருந்தேவி குலைந்தனள் நடுங்கி,
‘கணவனை இழந்தோர்க்குக் காட்டுவது இல்’ என்று
இணை அடி தொழுது வீழ்ந்தனளே, மடமொழி.

வெண்பா

1.‘அல்லவை செய்தார்க்கு அறம் கூற்றம் ஆம்’ என்னும்,
பல் அவையோர் சொல்லும் பழுது அன்றே-பொல்லா
வடுவினையே செய்த வய வேந்தன் தேவி!
கடு வினையேன் செய்வதூஉம் காண்.

2.காவி உகு நீரும், கையில் தனிச் சிலம்பும்,
ஆவி குடிபோன அவ் வடிவும், பாவியேன்!
காடு எல்லாம் சூழ்ந்த கருங் குழலும்-கண்டு, அஞ்சி,
கூடலான் கூடு ஆயினான்.

3.மெய்யில் பொடியும், விரித்த கருங் குழலும்,
கையில் தனிச் சிலம்பும், கண்ணீரும், வையைக் கோன்
கண்டளவே தோற்றான்; அக் காரிகை-தன் சொல் செவியில்
உண்டளவே தோற்றான், உயிர்.

வழக்குரைகாதை முற்றும்

## விளக்கம்

### பாண்டிமாதேவியின் தீக்கனவு

கோப்பெருந்தேவி தான் கண்ட தீக்கனவைத் தோழியிடம் கூறிக் கொண்டிருந்தாள். "தோழி! நம் வேந்தனது வெண்கொற்றக் குடையும் செங்கோலும் கீழே விழும்படியாகவும், அரண்மனை வாயிலில் இடைவிடாது மணியின் ஓசை ஒலிப்பதாகவும் கனவு கண்டேன். எட்டுத் திசைகளும் அப்போது அதிர்வுற்றன. சூரியனை இருள் விழுங்கவும் கண்டேன். இரவு நேரத்தில் வானவில் தோன்றவும் கண்டேன். ஆதலால் நமக்கு வரக்கூடிய துன்பம் ஒன்று உள்ளது. எனவே மன்னனிடம் சென்று கனவைக் கூறுவோம்" என்று கூறி மன்னனை நாடிச் சென்றாள்.

### கோப்பெருந்தேவியின் வருகை

கோப்பெருந்தேவி மன்னனை நாடிச் செல்லும்போது மகளிர் பலர் தேவியைச் சூழ்ந்து வந்தனர். அவர்களில் சிலர் கண்ணாடி ஏந்தி வர, சிலர் அணிகலன்களை ஏந்தி வர, சிலர் அழகிய கலன்களை ஏந்தி வர, சிலர் புதிய நூலாடையையும், பட்டாடையையும் ஏந்தி வர, சிலர் வெற்றிலைகளை ஏந்தி வர, சிலர் வண்ணமும் சுண்ணமும் கத்தூரி கலந்த சந்தனக் குழம்பும் ஏந்தி வர, சிலர் தொடையல் மாலை, கவரி, தூபம் ஆகியனவற்றையும் ஏந்தி வந்தனர். கூன் உடைய மகளிரும், குருடும், ஊமையருமான குற்றவேல் செய்யும் மகளிரும் அரசியைச் சூழ்ந்து வந்தனர். நரையுடைய முதுமகளிர் பலர், "கடல் சூழ்ந்த இவ்வுலகத்தினைக் காக்கும் பாண்டியனுடைய தேவியே நீடு வாழ்வாயாக" என வாழ்த்தினர். தோழியரும் காவல் மகளிரும், தேவி அடியெடுத்து வைக்குந்தோறும் புகழ்ந்து போற்றி வந்தனர். தன் பரிவாரங்களுடன் சென்ற தேவி தன் கணவனிடம் தான் கண்ட கனவின் தன்மையை எடுத்துச் சொல்ல, அதனைக் கேட்டுக் கொண்டு பாண்டியன் நெடுஞ்செழியன் அமர்ந்திருந்தான்.

### கண்ணகி வாயிற்காப்போனிடம் கூறியது

அப்போது சினத்துடன் அங்கு வந்த கண்ணகி, "வாயிற்காவலனே, அறிவு இழந்து நீதி நெறி தவறிய மன்னனின் வாயிற்காவலனே! பரல்களை உடைய சிலம்பு ஒன்றினைக் கையிலே ஏந்தியவளாய், தன் கணவனை இழந்த ஒருத்தி நம் கடைவாயிலில் நிற்கின்றாள் என்று உன் மன்னனிடம் சென்று அறிவிப்பாயாக" என்று கூறினாள்.

வாயிற்காவலன் கூற்று

வாயிற்காப்போன் மன்னனிடம் சென்று, "கொற்கை நகரத்து வேந்தனே வாழ்க! தென்திசையில் உள்ள பொதிய மலைக்குத் தலைவனே வாழ்க! செழியனே வாழ்க! தென்னவனே வாழ்க! பழிச்சொல் இல்லாத பாண்டிய மன்னனே வாழ்க! குருதிக் கொட்டும் தலையைப் பீடமாகக் கொண்டவளும், வேற்படையைக் கையில் ஏந்தியவளுமாகிய கொற்றவை அல்லள்! ஏழு கன்னியரில் இளையவளான பிடாரியும் அல்லள்! சிவபெருமானை நடனமாட வைத்த பத்திரகாளியும் அல்லள். தாருகாசுரனுடைய அகன்ற மார்பினைப் பிளந்த துர்க்கையும் அல்லள். பகைமை கொண்டவள் போலவும், உள்ளத்தில் மிகுந்த சினம் கொண்டவள் போலவும் உள்ள அவள் கையில் பொற்சிலம்பு ஒன்றினை ஏந்தியவளாய், கணவனை இழந்தவளாய் நம் வாயிற்புறத்தில் வந்து நிற்கின்றாள்" என்று கூறினான். அத்தகையவளை இங்கே அழைத்து வருக என ஆணையிட்டான் மன்னன்.

கண்ணகி வழக்குரைத்த நிலை

வாயிலோன் வழிகாட்ட கண்ணகி உள்ளே சென்றாள். அவளைக் கண்ட பாண்டியன், "கண்ணீர் சிந்தும் கண்களுடன் என் முன் வந்திருப்பவளே! நீ யார்? என வினவினான்.

கண்ணகி பெருஞ்சீற்றம் கொண்டு, "ஆராய்ந்து அறியாத மன்னனே! நர்ன என்னைப் பற்றிக் கூறுகிறேன் கேட்பாயாக. தேவர்களும் வியப்படையுமாறு புறாவின் துன்பத்தைத் தீர்த்த சிபி என்ற மன்னனும், தன் கன்றை இழந்த பசுவின் துன்பத்தைக் கண்டு ஆற்றாமல், அக்கன்று இறப்பதற்குக் காரணமான தன் மகனைத் தன்னுடைய தேர்ச்சக்கரத்தைக் கொண்டு தண்டித்த மனுநீதிச் சோழனும் வாழ்ந்த புகார் நகரமே என் ஊராகும். அவ்வூரில் புகழ்

பெற்று விளங்கும் பெருங்குடி என்னும் வணிகர் மரபில் வாழும் மாசாத்துவான் என்பவனின் மகனாகப் பிறந்து, வாழ வேண்டும் என்ற விருப்பம் கொண்டு, ஊழ்வினை துரத்த, உன் மதுரை மாநகருக்கு வந்து, என்னுடைய கால் சிலம்பினை விற்பதற்கு விரும்பி, உன்னால் கள்வன் என்று குற்றம் சுமத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட கோவலன் மனைவி நான். என் பெயர் கண்ணகி" என்று கூறினாள்.

கண்ணகி வழக்கில் வென்றமை

கண்ணகியின் சொல் கேட்ட பாண்டிய மன்னன், "பெண் தெய்வமே கள்வனைக் கொல்லுதல் கொடுங்கோன்மை அன்று. முறை தவறாத அரச நீதியே ஆகும்" என்றான். அதற்குக் கண்ணகி, "நல்ல முறையில் நீதி அறிந்து செயலாற்றாத மன்னனே! என் காலில் உள்ள சிலம்பு மாணிக்கக் கற்களைப் பரல்களாகக் கொண்டது" என்றாள். பாண்டிய மன்னன், "என் மனைவியின் கால் சிலம்பில் பரல்களாக இருப்பவை முத்துக்கள்" என்று கூறினான். பின்பு "கோவலனிடமிருந்து பெறப்பட்ட சிலம்பைக் கொண்டு வாருங்கள்" என்று கட்டளையிட்டு வரவழைத்து கண்ணகியின் முன் வைத்தான். உடனே கண்ணகி அவர்கள் வைத்த சிலம்பினை எடுத்து உடைத்தாள். அச்சிலம்பிலிருந்து மாணிக்கப் பரல் ஒன்று மன்னனின் முகத்திலும் வாயிலும் தெறித்து விழுந்தன.

பாண்டியன் தன் தவறுணர்ந்து இறத்தல்

அவ்வாறு தெறித்த மாணிக்கப் பரல் கண்டு திடுக்கிட்ட வேந்தன் "வெண்கொற்றக்குடை தாழவும், செங்கோல் வளையவும், பொற்கொல்லன் பொய்யுரை கேட்டு நீதி தவறிய நான் அரசன் இல்லை. கோவலன் சிலம்பை என்னுடையதாகக் கொண்டதால் நானே கள்வன்", எனக்கூறி உள்ளம் குமுறினான். துடித்தான். மக்களைக் காக்கும் பாண்டிய நாட்டு ஆட்சிக்கு என் காரணமாகத் தவறு நேர்ந்து விட்டதே என்று பதறினான். "கெடுக என் ஆயுள்" எனத் தனக்குத் தானே தண்டனை விதித்துக் கொண்டு மயங்கிக் கீழே விழுந்து இறந்து போனான். கணவனின் மரணம் கண்டு கோப்பெருந்தேவி உள்ளம் நிலை குலைந்து உடல் நடுங்கினாள். "தாய் தந்தையரை இழந்தவர்க்கு அம்முறை சொல்லிப் பிறரைக் காட்டி ஆறுதல் கூற முடியும். ஆனால், கணவனை இழந்தோர்க்கு அங்ஙனம்

காட்டலாகாது” எனக் கருதித் தன் கணனின் கால்களைத் தொட்டு வணங்கி விழுந்து இறந்து போனாள்.

## வெண்பா உரை

### கண்ணகி கூற்று

பாவச்செயல்களைச் செய்தவர்களை அறமே எமனாக இருந்து தண்டிக்கும் என்று சான்றோர் கூறும் சொற்கள் பொய்யல்ல. கொடிய தீமையைச் செய்த பாண்டிய மன்னனின் தேவியே! தீவினைக்கு ஆட்பட்ட நான் இனிச் செய்யவிருக்கும் செயல்களையும் நீ காண்பாயாக” என பாண்டிமாதேவி இறந்தது தெரியாமல் கண்ணகி கூறினாள்.

### கண்ணகி கூற்று

“கண்ணகியின் கண்ணீரையும், அவள் கையில் ஏந்திய சிலம்பையும், உயிர் நீத்த உடல் போன்ற அவள் வடிவத்தையும், காடு போல விரிந்து உடல் முழுவதும் சூழ்ந்த அவளது கூந்தலையும், பாண்டிய மன்னன் கண்டு அச்சமுற்று உயிர் துறந்தான். தீவினை மிக்க பாவியாகிய நான் அதைக் கண்கூடாகக் கண்டேன்” என்று கூறினாள்.

### கண்டோர் கூற்று

“கண்ணகியின் உடம்பில் படிந்த புழுதியையும், விரிந்து கிடந்த கூந்தலையும், கையில் இருந்த ஒற்றைச் சிலம்பையும், கண்ணீரையும் பாண்டியன் கண்ட உடனே வழக்கில் தோற்றான். அக்கண்ணகி வழக்காடிய சொற்கள் செயியில் புகுந்தபோது அவன் உயிர் விட்டான்” என்று கூறினர்.

ஒரு நம்பி அப்பூதி அடியார்க்கும் அடியேன்..” : சுந்தரமூர்த்தி நாயனார்

சோழநாட்டில் திருவையாறு பக்கம் இருக்கின்றது அந்த திங்களூர். அது அன்றும் இருந்தது. இன்றும் இருக்கின்றது. சந்திரனுக்கான ஆலயம் அமைந்த பிரதான தலம் அது. இதனால் திங்களூர் என்றாயிற்று.

அன்று அந்த ஊரில் மதிப்பும், மரியாதையும், பக்தியுமாக, குற்றம் குறை சொல்லமுடியாத சிவனடியாராக வாழ்ந்து கொண்டிருந்தார் அந்த அப்பூதி அடிகள். சிவத்தொண்டும் சிவனடியாருக்கான தொண்டுமே தன் சுவாசமாக கருதி , அதுவே தன் பிறப்பின் கடமையாக கருதி பழுதற செய்து கொண்டிருந்தவர்.

அந்த குடும்பமே சிவபக்தியின் உச்சத்தில் இருந்தது, அவரின் மனைவியும் கணவனுக்கேற்ற மகராசி. கணவன் ஏற்றுக்கொண்ட சிவதொண்டுக்கு முழு உதவியாய் இருந்து வந்தார், கணவனை போலவே முழு சிவபக்தை.

இவர்களுக்கு இரு மகன்கள், எல்லா வகையிலும் ஆசீர்வாதமான வாழ்வு அவர்களுக்கு இருந்தது.

அப்பூதி அடிகள் சிவத்தொண்டர் . ஆனால் ஒரு மிக சிறந்த சிவனடியாரை தன் குருவாக கொண்டிருந்தார், அவரிலே சிவனை கண்டார், அவரே நடமாடும் சிவன் என்றும் அவரே தன் உயிருக்கு உயிரான குரு எனவும் மனதில் கொண்டு நாளெல்லாம் அவர் நினைவில் திருப்பணிகள் செய்தார்.

ஆம், அந்த குரு திருநாவுக்கரசர். இவரின் சமகாலத்தவர்.

ஏகலைவன் துரோணரை நினைத்தே உயர்ந்தது போல திருநாவுக்கரசை நினைத்தே சிவத்தொண்டில் இருந்தவர். அனுதினமும் அவர் புகழை பாடுவார், அவரைப் பற்றிய விஷயங்களை ஆவலாய் கேட்பார். காரணம் சைவத்தை வளர்க்க பல அற்புதங்களை செய்து சமணரை திருநாவுக்கரசர் வென்று கொண்டிருந்த காலங்கள் அவை.

இவ்வளவுக்கும் அப்பூதி அடிகள் திருநாவுக்கரசரை நேரில் கண்டதில்லை.

திருநாவுக்கரசர் எனும் தன் குரு பெயரை எங்கெல்லாம் நிறுத்தமுடியுமோ அங்கு நிறுத்தினார், அவர் வீடு திருநாவுக்கரசு மாளிகை, அவரின் இரு மகன்கள் பெயர் திருநாவுக்கரசர், அவர் கட்டி வைத்த சத்திரங்களும், வெட்டி வைத்த குளங்களும், வழிப்போக்கருக்கு அமைத்த தண்ணீர் பந்தலும் திருநாவுக்கரசர் பெயரையே தாங்கி நின்றன.

எங்கோ பிறக்கும் நதி எங்கோ பாய்வது போல, மலைமேல் பிறக்கும் தென்றல் வழிநடந்து செல்லுதல் போல, எங்கோ நடமாடிய திருநாவுக்கரசரின் புகழ் இந்த அப்பூதி அடிகளை அப்படி கொண்டாட வைத்திருந்தது.

மணமிக்க சாம்பிராணி தெருவெல்லாம் மணம் பரப்புவது போல அப்பூதியாரின் புகழ் சோழநாடெங்கும் பரவி மெல்ல திருநாவுக்கரசரையும் அடைந்தது. அந்த குருவிடம் அவரின் கண் காணா சீடனின் புகழ் சென்று அடைந்தது

அவன் பெயரில் அல்லாது தன் பெயரில் அவன் செய்யும் நலப்பணிகளை கேள்விப்பட்ட திருநாவுக்கரசர் உருகினார். ஒப்பற்ற சிவனடியார் எனும் ஒரே காரணத்துக்காக அப்பூதி அடிகள் தன் பெயரை கொண்டாடுவதை அவர் உள்மனம் உணர்ந்தது.

ஒரு மனிதன் தான் செய்யும் செயலில் எல்லாம் அவனை மறந்து, அவன் பெயரை மறைத்து சிவனடியாரான தன்னை முன்னிறுத்துகின்றான் என்றால் தன்மேலான அன்பும், அதற்கு மேல் சிவன் மேலான பக்தியும் அவரை மனதால் உருக செய்தன.

அப்படி ஒரு சிவத்தொண்டனா? அவனைப் பார்க்க வேண்டுமே என திங்களூருக்கு நடந்தார் திருநாவுக்கரசர்.

திருநாவுக்கரசருக்கு சிவனைத் தவிர எவரையும் தெரியாது. அப்பூதி அடிகளுக்கு திருநாவுக்கரசரைத் தவிர எவரையும் தெரியாது.

இருவருக்கும் இருக்கும் ஒரே இணைப்பு சிவன், இரு சிவனடியாரும் ஒருவரை ஒருவர் சந்திக்கப் போவதை உணர்ந்த சிவன் ஒரு விளையாட்டு ஆட விரும்பினார்.

திங்களூரை அடைந்தார் திருநாவுக்கரசர். எங்கும் அவர் பெயரில் அன்னசத்திரம் , மண்டபம் , குளம், நீர்ப்பந்தல் எல்லாம் அமைந்திருந்தன. நீர்ப்பந்தல் கூட கீற்று வேயப்பட்டக் குடிலில் மணலை குளிராக்கி அதில் புதைக்கப்பட்ட பானைகளில் குளிர்ந்த நீர் இருக்குமாறு அமைக்கப்பட்டிருந்தது, கடும்வெயிலில் வருவோர் தாகசாந்தி செய்யும் பொழுது திருநாவுக்கரசை நினைத்துக் கொள்ள வேண்டுமாம்.

அந்த ஊரில் திரும்பும் இடமெல்லாம் தன் பெயர் இருப்பதையும், தன்மேல் அப்பூதி அடிகளுக்கு இருக்கும் அன்பையும் உணர்ந்து மெல்ல அவர் வீட்டுக்கு சென்றார் திருநாவுக்கரசர். முன்பின் பார்த்ததில்லை என்பதால் அப்பூதி அடிகளுக்கு அவர் திருநாவுக்கரசர் எனத் தெரியவில்லை. வழக்கமாக சிவனடியார்களை வரவேற்று உபசரிக்கும் அப்பூதி அடிகள் திருநாவுக்கரசரையும் ஒரு சிவனடியாராக எண்ணி வரவேற்றார் .

திருநாவுக்கரசர் தான் யாரென சொல்லாமல் , “அன்பரே, நீங்கள் நிறைய தொண்டுகளை செய்கின்றீர்கள், ஆனால் உங்கள் பெயரால் செய்யாமல், ஏன் யாரோ ஒருவர் பெயரில் செய்ய வேண்டும்” என கேட்க, அப்பூதி அடிகளின் முகம் மாறியது. “யாரோ ஒருவர் பெயரில்” எனும் அந்த வார்த்தை அவர் உள்ளத்தைச் சுட்டது.

கொஞ்சம் ஆத்திரமாக “அய்யா, நீர் சிவனடியார்தானே, உமக்கு திருநாவுக்கரசரைப் பற்றி தெரியாமல் இருந்தால் அது நம்பும்படியாக இல்லை. அவர் சமணரை வென்று சைவம் தழைக்க செய்தவர். கடலிலே கல்லைக் கட்டி எறிந்தபொழுதும் கல்லில் தோணிபோல் மிதந்தவர், மதுரை கூன் பாண்டியனின் கொடுநோயினை தீர்த்து அவரை சைவம்பால் திருப்பியவர். சிவனின் முழு அருள்பெற்ற அவரை யாரோ ஒருவர் என்பதா . அவர் எனக்கு தலைவன், குருநாதர், அவரால் சைவம் வாழ்கின்றது.

நாமெல்லாம் சிவனடியார், ஆனால் உம்மாலும் எம்மாலும் செய்ய முடியாத பெரும் விஷயங்களை சிவன் அருளால் அவர் செய்கின்றார் என்றால் அவர் பெயர் நிலைக்க வேண்டுமா. அல்லது என் பெயர் ..உன் பெயர் நிலைக்க வேண்டுமா..

அவர் முன் நான் ஒரு தூசு, அவர் அருகே கூட நிற்கத் தகுதியற்றவன். என்னால் முடிந்தது நான் செய்யும் நற்கிரியைகளில் அவர் பெயரை முன்னிறுத்துவது. அதைச் செய்கின்றேன். அவர் பெயர் வாழவேண்டும். காலமெல்லாம் நிலைக்க வேண்டும். என்னில் இருந்து அவர் செயலாற்றும் பொழுது அவர் பெயரை இடாமல் வேறு எவர் பெயரை இடுவது?

அவரை அறியாத நீர் சிவனடியார் என்பதில் சந்தேகம் வந்து விட்டது, நீர் கிளம்பலாம்" என சொல்லி விட்டார்.

ஆம். தன் குரு மேல் கொண்ட பக்தி அவரை அப்படி சொல்ல வைத்தது. தன் சீடன் தன்மேல் கொண்டிருக்கும் அன்பை அவன் வாயாலேயே கேட்டு மகிழ்ந்து திருநாவுக்கரசர் மெல்ல தன்னை வெளிப்படுத்தினார்.

யாரோ ஒரு அடியாரிடம் பேசுகின்றோம் என நினைத்திருந்த அப்பூதி அடிகளுக்கு அவர்தான் தன் குருநாதர் திருநாவுக்கரசர் என்றவுடன் மனம் துள்ளியது. ஆர்ப்பரித்தது. கண்கள் கலங்கின. ஆனந்தக் கண்ணீர் பெருகியது.

தெய்வம் கண்ட பக்தன் போல, கண் பெற்ற குருடன் போல அவ்வளவு ஆனந்தம். சற்று நேரம் பேசாமல் அப்படியே சிலையாய் நின்றார், மெல்ல மூச்சு வாங்கியது, மூச்சு பெரும் அழுகையாய் ஓலமிட்டு உயர்ந்தது.

ஆனந்தத்தில் கதறினார் அப்பூதி அடிகள். அவர் வாழ்வில் அதுதான் மகா மகா உன்னதமான நொடி. யாருடைய புகழ் கேட்டு, சிவ பக்தி கேட்டு குருநாதர் என மனதால் வணங்கினாரோ, அவரே தன் வீட்டுக்குத் தன்னைத் தேடி வந்தால் எப்படி இருக்கும்.

தன் குடும்பத்தாரை அழைத்தார் . ஒரு பாத்திரத்தில் நீரெடுத்து அவர் பாதம் கழுவி தன் குடும்பமாய் குடித்தார், தலையில் தெளித்துக் கொண்டார், வீடெல்லாம் தெளித்தும் கொண்டார்.

அவரைக் கொண்டாடினார். தெய்வம் வந்தபின் விழா எடுக்காமல் எப்படி .விழா என்றால் உணவு இல்லாமல் எப்படி.

அப்பூதி அடிகளின் இல்லாள் இல்லாத வகையில்லை என சொல்லும் அளவு சமையலை வகைவகையாக செய்யத் தொடங்கினார்.

அப்பூதி அடிகள் அவரை கண் கொண்டாமல் பார்த்துக் கொண்டே அவரின் பேச்சுக்களை கேட்டுக் கொண்டிருந்தார், திருநாவுக்கரசரும் இவரின் சந்தேகங்களை எல்லாம் போக்கிக் கொண்டிருந்தார்.

அப்பூதி அடிகள் மனதில் எரிந்து கொண்டிருந்த சிவபெருமான் மீதான ஞான நெருப்புக்கு நெய் ஊற்றிக் கொண்டிருந்தார் திருநாவுக்கரசர்.

நாழிகைகள் நகர்ந்தன, அமுது படைக்கும் நேரம் நெருங்கிற்று.

அந்த அப்பூதி அடிகள் அந்தணர், திருநாவுக்கரசரோ வேளாளர். ஆனால் இப்போது அவர்களெல்லாம் ஒரே சாதி, சிவனடியார் சாதி. அந்த அந்தணர் அப்பூதி அடிகளுக்கு வேளாளர் திருநாவுக்கரசர் சாதி தெரியவில்லை. மாறாக சிவமே தெரிந்தார். வணங்கினார், கொண்டாடினார்.

அப்பூதி அடிகளின் மனைவி நைவேத்தியம் தயாரிக்கும் பக்குவத்துடன் அர்ப்பணிப்புடன் சமையல் முடித்தார், அப்பூதி அடிகளின் மகன்களான சின்ன திருநாவுக்கரசும், பெரிய திருநாவுக்கரசும் ஓடி ஓடி வேலை செய்தனர் . உண்ணும் இடத்தை சுத்தம் செய்து விட்டு பெரிய திருநாவுக்கரசு சமையலறைக்குள் நுழைந்தான், விதி கூரிய விஷப்பற்களோடு காத்திருப்பது அறியாமல் தாயார் அவனை வாழை இலை அறுத்துவர அனுப்பினார்.

வாராது வந்த மாமணியான அந்த மகானுக்கு, திருநாவுக்கரசருக்கு மகாராஜாவுக்கும் கிடைக்கா வரவேற்பினை அக்குடும்பம் உளமார கொடுத்துக் கொண்டிருந்தது.

வாழை இலை அறுக்கப் போனான் மூத்த திருநாவுக்கரசு. நல்ல இளம் இலையாய் அவன் அறுக்கும் பொழுது அங்கு மறைந்திருந்த பாம்பு அவனைத் தீண்டிற்று.

அந்நாளில் பாம்பு கடிக்கு சில மருத்துவம் உண்டு, ஆதுரச்சாலை எனப்படும் வைத்தியசாலை உண்டு, ஆனால் உடனடியாக செல்ல வேண்டும். சிவனடியாரான திருநாவுக்கரசருக்கு அமுது படைப்பதே முதல் வேலை என கருதிய அந்த பாலகன், ஆதுர சாலை செல்லாமல் வீட்டுக்கு ஓடிவந்து இலையைக் கொடுத்தான். தன் கடமையினை நிறைவேற்றிய மகிழ்வில் வாயில் நுரைதள்ள சரிந்தான், அப்பூதி அடிகளின் வளர்ப்பு அப்படி.

உள்ளே திருநாவுக்கரசர் உணவுக்கு அமர்ந்திருக்க, அடுப்பறையில் மகன் இறந்துகிடக்க அதிர்ச்சியில் உறைந்த அப்பூதி அடிகளின் மனைவி உள்ளுக்குள் அழுதாள், பொங்கிவரும் அழுகையினை கட்டுப்படுத்தி மெல்லிய இயல்பான குரலில் கணவனை அழைத்தார்.

ஆம், சிவனடியார் மனதை நோகடிக்கக் கூடாது எனும் உறுதி அவளுக்கு இருந்தது.

உள்ளே சென்ற அப்பூதி அடிகள் மகனின் உடலை கண்டு கலங்கினார். பிள்ளை சடலம் கண்டபின் துடித்து கதறாத பெற்றோர் மனம் உண்டா..

அவர் வாழ்வில் மிகப் பெரும் சந்தோஷம் நடந்த சில நாழிகையிலேயே மாபெரும் துயரமும் நடந்தேறிற்று.

உள்ளே மகனின் சடலம், வெளியே உணவுக்காய் காத்திருக்கும் குரு திருநாவுக்கரசர்.

எவர் பெயரால் அப்பூதி அடிகள் ஊரெல்லாம் நீரும், சோறும் போட்டு திருப்பணி செய்தாரோ அந்த திருநாவுக்கரசருக்கு தன் கரங்களால் அப்பூதி அடிகள் அமுது பரிமாற வேண்டிய நேரமிது. தகப்பனாக மகனுக்கு அழுது கருமாதி செய்ய வேண்டிய நேரமும் அதுவே.

மகனை நினைத்து அழுவதா, திருநாவுக்கரசுக்கு செய்யும் சேவையைத் தொடர்வதா.. கதிகலங்கி நின்றார் அப்பூதி அடிகள், மகனை மடியில் போட்டு மனதால் அழுது கொண்டிருந்தாள் அந்த மாதரசி.

நடப்பதை ஓரமாக பார்த்து திகைத்து நின்று கொண்டிருந்தான் சின்ன திருநாவுக்கரசு.

“ஏ அப்பூதியே உன் வழக்கமான கடமையான சிவனடியாரை அதுவும் உன் குருவான சிவனடியாரை உபசரிக்க போகின்றாயா.. இல்லை அவரை புறந்தள்ளிவிட்டு மகனுக்காய் அழப்போகின்றாயா” என மனசாட்சி கேட்டுக் கொண்டிருக்க, இறுகி அமர்ந்திருந்தார் அப்பூதி அடிகள்.

அவர் முகத்தையே பார்த்து மனதால் கதறிகொண்டிருந்தாள் மனைவி, அருகே இளையவன்.

அப்பூதி அடிகள் சிவனடியார் வந்த வேளை சரியில்லை என்று குறை கூறி அடித்து விரட்டிவிட்டு மானிட இயல்பில் கதறித் துடித்து அழுவாரா , அல்லது சிவனடியாருக்கு உணவிடுவாரா எனும் சோதனையின் கடைசி நொடி நெருங்கிற்று

“அப்பூதி..” என குரல் கொடுத்தார் திருநாவுக்கரசர்.

“அய்யா, ஒரு நிமிடம்” என எழுந்தார் அப்பூதி அடிகள். அவர் குரல் கேட்ட கணம் மனம் சிவத்தால் நிறைந்தது, மனம் தெளிவானது, சிவனே நிரந்தரம். சிவனடியார்களை உபசரிப்பதே தன் சுயதர்மம் . அதுவே முதல் கடமை எனும் தெளிவு பெற்றவராய் எழுந்தார்.

மனைவியினை நோக்கினார், “நான் சொல்வதை கேட்பாயா” என்றார். கணவனுக்கு அடங்கிய அந்த பதிவிரதை அதைத் தவிர என்ன செய்வேன் என்றாள்

“மனையாளே, நிச்சயம் இவன் இனி திரும்பப் போவதில்லை, முடிந்தது முடிந்ததுதான். ஆனால் இது தெரிந்தால் நாம் கால்வைத்த நேரம் இப்படி ஆயிற்றே என குருநாதர் மனமுடைவார், தனக்காக இலை அறுக்கச் சென்று இறந்தான் பாலகன் என கதறித் துடிப்பார்.

அது அவரின் மனதை பாதிக்கும், அழவைக்கும். மிகப்பெரும் பொறுப்பை ஏற்று சிவனுக்காக வாழும் அவர் மனதில் ஏற்படும் அத்துன்பம் அவரின் சிவத்தொண்டை பாதிக்கும். நாம் அதற்கு காரணமாய் இருத்தல் கூடாது

விஷயத்தை அவரிடம் மறைப்போம், இப்போதைக்கு எதுவும் காட்டாமல் உணவிட்டு அவரை அனுப்பிவிட்டு அதன்பின் துக்கத்தை ஏற்போம், இது சிவனடியாரை ஆதரிக்கும் வீடு, நாமோ சிவனடியாரை உபசரிப்பதை கடமையாய் கொண்டவர்கள். மகன் என்றல்ல நானே இறந்திருந்தாலும் இதுதான் நடந்தாக வேண்டும்”

மனைவியும் மகனும் அதை மவுனமாக ஏற்றனர். ஓலைப்பாய் ஒன்றில் மூத்தவன் உடலை சுற்றி ஒளித்து வைத்துவிட்டு இலையும் அமுதுமாக திருநாவுக்கரசை நோக்கி ஓடி வந்தனர்.

உணவருந்து முன் உடலை முறையாக சுத்தம் செய்து, திறுநீர் இட்டு அமர்ந்தார் திருநாவுக்கரசர், அவர்களையும் முறையாக வரசெய்து திருநீறு இட்டு அமரப் பணித்தார்.

அந்த இலையினை இட்டாள் அப்பூதி அணிகளின் மனைவி . அதில் அவள் கண்களை மீறி ஒரு துளி கண்ணீர் விழுந்தது.

மாபெரும் ஞானியான திருநாவுக்கரசருக்கு ஏதோ தவறு நேர்ந்திருக்கிறது என்பது விளங்கிற்று. எனினும் வெளிக்காட்டாமல் எல்லோரும் என்னுடன் அமருங்கள் என்றார் . மூவரும் அமர்ந்தனர்.

“எங்கே மூத்த மகன் திருநாவுக்கரசு அவனையும் அழையுங்கள், நாம் சிவன் புகழ் பாடிவிட்டு அமுது உண்ணலாம்” என கோரினார் திருநாவுக்கரசர்.

“அய்யா அவன் இப்போது உதவமாட்டான் நாம் உண்ணலாம்” என சொன்னார் அப்பூதி அடிகள்.

“அவன் வராமல் நான் உண்ணமாட்டேன்..” என அன்னம் தொடாமல் கையெடுத்தார் திருநாவுக்கரசர், அதற்கு மேல் பொறுக்கமுடியாமல் வாய்விட்டு அழுதார் அப்பூதி அடிகளின் மனைவி.

அவள் சொல்லாததை அவள் கண்ணீர் சொல்லிற்று..

ஓடிச் சென்ற திருநாவுக்கரசர் பாயில் சுற்றப்பட்ட பாலகன் உடலைக் கண்டு அதிர்ந்தார், அவனை தன் கையால் சுமந்து சிவாலயம் அடைந்தார் . பதிகம் பாடி மன்றாடத் தொடங்கினார் .

“ஒன்று கொலாம் அவர் சிந்தை உயர்வரை
ஒன்று கொலாம் உயரும் மதி சூடுவர்
ஒன்று கொலாம் இடு வெண்டலை கையது
ஒன்று கொலாம் அவர் ஊர்வது.தானே”

“ஒன்றே நினைப்பார் சிவனடியார், அந்த சிவனையே நினைப்பார் சிவனடியார். பாம்பின் விடம் வெப்பமானது, நிலவின் ஒளியோ குளிர்ச்சியானது. நிலவினை சூடியிருக்கும் பெருமானே !இப்பாலகன் உடலிலிருந்து வெம்மை விடம் நீக்கி உடலைக் குளிர்ச்சியுறச் செய்து உயிர்ப் பிழைக்க வைப்பாய்..” என்று பொருள்படப் பாடினார்.

இப்படி இரண்டு கொலாம், மூன்று கொலாம் எனத் தொடங்கும் பத்து பாடல்களைப் பாடினார் திருநாவுக்கரசர். இது விடம் தீர்த்த படலம் என பெரியபுராணத்தில் வரும். முடிந்தால் வாசியுங்கள்

பாடலை உருக்கமாக திருநாவுக்கரசர் பாடப்பாட விஷம் பாலகன் உடலில் இருந்து இறங்கிக் கொண்டே வந்தது, விஷத்தால் உருவான

நீலகருப்பு மறைந்து மெல்ல அவன் இயல்பான நிறம் உடலில் படர்ந்தது.

நம்பமுடியாத அதிசயமாக அதைப் பார்த்து கொண்டிருந்தது மக்கள் கூட்டம், அப்பூதி அடிகளும், அவர் மனைவியும் ,மகனும் வியப்பின் உச்சிக்குச் சென்றனர்.

எத்தனையோ அதிசயங்களை சிவன் பெயரால் செய்த திருநாவுக்கரசர், பத்தாம் பாடல் பாடி முடிக்கவும் மெல்ல கண்திறந்தான் பெரிய திருநாவுக்கரசு.

பத்துமாதம் கழித்து பிறக்கும் பிள்ளை போல், பத்தாம் பாடல் முடிவில் மறுபிறப்பாக உயிர்பெற்று வந்தான் அவன்.

கூட்டம் பேச்சற்று நின்றது, நன்றியாலும் கண்ணீராலும் நிறைந்து மகனை அணைத்து கொண்டு கதறிக்கொண்டிருந்தாள் அப்பூதி அடிகளின் மனைவி.

எதுவுமே நடக்காதவர் போல் நின்று கொண்டிருந்தார் திருநாவுக்கரசர், மிக இயல்பாய் நின்றார். எல்லாம் சிவனருளால் நடந்ததன்றி தன்னால் ஏதுமில்லை என்பது அதில் தெரிந்தது.

மகன் செத்துப் பிழைத்த அந்நிலையிலும் மகனை நோக்காமல் “அடியாரே நீர் இன்னும் சாப்பிடவில்லையே, வீட்டுக்கு வந்து உணவருந்துங்கள், மீதியினை பின்னால் பேசலாம்” என குனிந்து நின்றார் அப்பூதி அடிகளார்.

அந்த நொடியில் திருநாவுக்கரசரே அதிர்ந்தார். அவர் என்ன வானலோகமே அசைந்தது, கயிலாயத்து சிவனுக்கே கண்ணீர் துளிர்த்து.

ஆம், ஒரு சிவனடியார் என்ற ஒரு காரணத்துக்காக, ஒரே ஒரு காரணத்துக்காக இப்படி தன்னை மறந்து, தன்னிலை மறந்து அவர்களை இப்படி சிவன் போல் கவனிக்கின்றார் அப்பூதி அடிகள். , இந்த பக்திக்கு எதை கொடுப்பது..

எதை கொடுத்தாலும் ஈடாகுமா..இந்த அன்புக்கு என்ன கொடுப்பது..

“சிவனே ..சிவனே ..உனக்கு இப்படியும் ஒரு அடியாரா.. உன் அம்சம் இப்படியும் உண்டா ” என மனமுருகி சொல்லிக் கொண்டே அவரை அணைத்துக் கொண்டார் திருநாவுக்கரசர்.

கூட்டம் ஆர்ப்பரிக்க, அப்பூதி அணிகளின் மனைவி உயிர் பெற்ற தன் மகனை நெஞ்சோடு அணைத்து சிவனை நோக்கி நன்றியாய் அழுது கொண்டிருந்தார். தானும் தன் கணவனும் குடும்பமாய் செய்த சிவத்தொண்டு தன் மகன் உயிரை காத்து தன் குடும்பத்தைக் காத்தது என்பதை உணர்ந்தாள்.

நிச்சயம் இது தன் குடும்பத்துக்கு வந்த பேராபத்து. எப்படியும் இந்த ஆபத்து வந்திருக்கும். அந்த அரவம் பாலகனை இன்று இல்லையென்றால் இன்னொரு நாள் கூட தீண்டியிருக்கலாம்

அந்த ஆபத்தை யார் நீக்கமுடியுமோ அவர் இருக்கும் நேரம் அதை அனுமதித்து அதை நீக்கியும் விட்டது இறை.

ஆம் சிவன் அவரைக் கண்காணித்து கொண்டே இருந்தார், சரியான நேரத்தில் மிக சரியான அடியாரை அனுப்பி தன் பக்தனைக் காத்தும் கொண்டார், மிக அற்புதமாக செய்தார்.

பின் சில நாட்கள் அப்பூதி அடிகள் வீட்டில் தங்கியிருந்த திருநாவுகரசர் அவர்களை எல்லாம் ஆசீர்வதித்து விட்டு வேறிடம் சென்றார்.

தன் குருமேலான மிகப் பெரும் பக்திக்குச் சாட்சியாக, சிவன் மேல் கொண்ட அன்பு காரணமாய் உதித்த அன்பில் கிடைத்த குருவினை சிவனாக நினைத்து பின் தொடர்ந்து பெரும் சிரமத்தையும் தியாகத்தையும் செய்ததால் அப்பூதி அடிகள் நாயன்மார்களில் ஒருவரானார்.

ஆம் . சிவன் மேலான அன்பே அவரை சிவனடியார்களை கொண்டாடச் செய்தது, அப்படி மிகப்பெரும் அடியாரான

திருநாவுக்கரசரை ஞானகுருவாக கொண்டு அவர் கொஞ்சமும் வழிதவறாமல் நடந்ததே, மிகப் பெரும் துயரத்திலும் தன் இறைத்தொண்டில் வழுவாமல் நின்றதே அவரை நாயன்மார்களில் ஒருவராக்கியது.

அப்பூதி அடிகளிடம் அகங்காரமில்லை, பேராசை இல்லை, நான், என் குடும்பம் எனும் சுயநலமில்லை. மாறாக சிவனை யாரெல்லாம் தேடுவார்களோ , அவருக்காக வாழ்வார்களோ, அப்படிப்பட்டவர்களுக்காக நான் வாழ்வேன் என நின்றார்.

சிவனை, சிவனடியார்கள் போற்றினால் நான் அவர்களை போற்றுவேன், அடியார்க்கும் அடியார் நான் என தாழ்ச்சியாய் அவர் எடுத்த முடிவே அவரை அந்த மிகப்பெரும் இடத்துக்குக் கொண்டு சேர்த்தது.

சிவன் மேல் கொண்ட அன்பும், அந்த அன்பினை சிவனடியார்மேல் பணிவாய் காட்டியதுமே அவரின் பெரும் உயர்வுக்கு காரணம்.

இந்த அப்பூதி அடிகளார் காலத்தில் அந்த திங்களூரில் ஏகப்பட்ட செல்வந்தர்கள் இருந்தனர், மிராசுதரும், இன்னும் பணமும் படையும் செல்வாக்கும் மிக்கோரும் இருந்தனர். ஆனால் இன்றுவரை மட்டுமல்லாது என்றும் அப்பூதி அடிகள் மட்டும் நிலைபெற்றது எப்படி?

ஆம் . அவர் அழியக் கூடிய பணமோ, நிலமோ, பொருளோ, பெண்ணோ தேடவில்லை . மாறாக நிரந்தரமான சிவனை தேடினார். அழியாப் புகழ் பெற்றார்

சிவனை நினைந்து சுமந்து திரியும் அடியவருக்கு செய்வதெல்லாம் சிவனுக்கு செய்வதே, அந்த அடியார்களுக்கு தாழ்ச்சியாய் ஒரு கிண்ணம் நீர் கொடுத்தாலும் அது சிவனுக்கே .

அதைக் கணக்கில் வைத்து கண்காணிக்கும் சிவபெருமான் உரிய காலம் வரும்பொழுது நமக்கு பல மடங்காக திருப்பித் தருவான்.

எப்படி நோக்கினாலும் அப்பூதி அடிகளார் வாழ்வு சொல்வது இதுதான் .

சாமான்ய பக்தனுக்கும் ஒரு நல்ல குரு கண்டிப்பாய் வேண்டும், அந்த குருவினை அவன் அணுபிசகாமல் பின்பற்றவும் வேண்டும்.

குரு கிடைக்கவில்லை என்றாலும் மனதால் ஒரு அடியாரை குருவாகக் கொண்டால் இறையருளால் அக்குரு நம்மைத் தேடிவருவார், நம்மை பரமனிடம் சேர்ப்பார்.

காரணம் இயங்குவதும் இயக்குவதும் சிவனே. தேடினால் கண்டடையலாம் அவன் சந்நிதியில் தட்டினால் அக்கதவு திறக்கப்படும், இது முக்கால உண்மை.

தைமாதம் ஒரு சதய நட்சத்திரம் நாளில் அவர் முக்தி அடைந்தார், அன்றிலிருந்து தை மாத சதய நாளில் அவருக்கு குருபூஜை நடத்தப்படுகின்றது, அன்று திங்களூர் கைலாசநாதர் திருக்கோவிலில் சிறப்பு வழிபாடுகள் செய்யப்பட்டு அவர் நினைவு கூறப்படுவார்.

திங்களூர் கைலாசநாதர் ஆலயம் எக்காலமும் அப்பூதியடிகள் நாயனார் புகழைச் சொல்லி அங்கு நிலைப்பெற்றிருக்கும், ஒப்பற்ற சிவபக்தன் வழிபட்டதால் அந்த ஆலயம் அழியாப் புகழுடையதாய் நிற்கின்றது.

முடிந்தால் அங்கு சென்று வழிபட்டு வாருங்கள், சிவனடியார்களுக்கு உதவிய புண்ணிய பலன் உங்களுக்கும் கிடைக்கும், உங்களுக்கும் நல்ல குருநாதர் அமைவார், அவர் உங்களை சிவனில் வழிநடத்துவார்.

**அலகு 3:** இலக்கணம்

"தமிழ் மொழியின் அமைப்பு - வ. ஜெயதேவன்

## மொழியின் இயல்பு (Nature of Language)

மொழி என்பது மனிதரின் மிகச் சிறந்த சிருஷ்டி. அது மனித எண்ணங்களை, உணர்வுகளை, அறிவை, அனுபவங்களை பகிரும் **தொடர்புக் கருவி**.
மொழியின் இயல்பை விவரிக்கும்போது ஆசிரியர்கள் பின்வரும் அம்சங்களை எடுத்துரைக்கிறார்கள்:

### 1.1 மொழியின் தோற்றம்

- மொழி இயற்கையாக ஏற்பட்ட ஒன்று அல்ல;
- மனித பிறப்பியல் + சமுதாய அடிப்படையிலான ஒரு உருவாக்கம்.
- அனுபவம் - தேவைகள் - ஒலி - சொல் - வாக்கியம் என வளர்ச்சி பெற்றது.

### 1.2 மொழியின் பண்புகள்

1. **சமூகப் பண்பு** – மொழி சமுதாயத்தில் மட்டுமே பயன்படும்.
2. **ஒலி அடிப்படையிலானது** – எழுத்து என்பது பின்னர் உருவானது.
3. **வளரும்** – காலத்தாலும் பயன்பாட்டாலும் மாற்றம் அடையும்.
4. **அடையாளம்** – ஒரு சமூகத்தையும், இனத்தையும் அடையாளப்படுத்தும்.

### 1.3 தமிழ் மொழியின் இயல்பு

- தமிழ் தனிப்பட்ட ஒலி அமைப்புடன் கூடிய **பழமையான செம்மொழி**.
- ஒலியும் எழுத்தும் நேரடி பொருத்தம் உடைய சில மொழிகளில் ஒன்று.
- மிகத் தெளிவான விகுதி அமைப்பு, வேற்றுமை உருபு அமைப்பு, வினைமுற்று அமைப்பு உள்ளது.

---

## 2. தமிழ்மொழியின் அமைப்புக் கூறுகள் (Structural Components)

**(பக்கம் 7–10)**

தமிழ் மொழி அமைப்பு மூன்று பெரும் கூறுகளை அடிப்படையாகக் கொண்டது:

### 2.1 ஒலி

- ஒலியை அடிப்படையாகக் கொண்டு எழுத்து உருவாகிறது.
- தமிழ் ஒலிகள் மனித உடலின் குறிப்பிட்ட இடத்து உச்சரிக்கப்படுகின்றன.

### 2.2 சொல்

- ஒலிகள் இணைந்தால் சொல் உருவாகும்.
- சொல் தொடர்ந்து இலக்கணப் பண்புகளைக் கொண்டு மாற்றம் அடைகிறது.

### 2.3 வாக்கியம்

- சொற்கள் இலக்கணத்திற்கிணங்க இணைந்தால் வாக்கியம்.
- வாக்கியம் தான் தொடர்பின் அடிப்படை வடிவம்.

இந்த மூன்று கூறுகளும் மொழியின் **மூல அமைப்பு**.

## 3. தமிழின் ஒலி அமைப்பு (Phonology)

**(பக்கம் 10–12)**

தமிழில் ஒலி அமைப்பு மிக நுட்பமானது. ஆசிரியர்கள் ஒலியின் சிறப்பு அம்சங்களை விரிவாக விளக்குகிறார்கள்.

3.1 எழுத்துகள் - ஒரு பார்வை

- **உயிரெழுத்து - 12**
- **மெய்யெழுத்து - 18**
- **உயிர்மெய் - 216**
- **ஆய்த எழுத்து - 1**

3.2 ஒலிகளின் தன்மைகள்

- **அகரம்** → வாயில் இருந்து வரும் ஒலி
- **மரபொலி** → மூக்கு வழி வரும்
- **நெடில் / குறில்** → நேர அளவு
- **நின்ற ஒலி, நழுவும் ஒலி** → உச்சரிப்பின் போக்கு

3.3 ஒலி-எழுத்து நேர்மறை

தமிழில் "எப்படி உச்சரிக்கிறோமோ, அதை அப்படியே எழுதுகிறோம்" என்ற ஒலி-எழுத்து பொருத்தம் மிகத் தெளிவு.

4. சொல்லின் உருவாக்கம் (Morphology)

**(பக்கம் 12–15)**

சொல் என்பது மொழியின் அடிப்படை அலகு.
ஆசிரியர்கள் சொல்லின் வகைகளையும், சொல்லை உருவாக்கும் முறைமைகளையும் விரிவாக விளக்குகின்றனர்.

4.1 சொல்லின் முக்கிய வகைகள்

1. **பெயர்ச்சொல்** – பொருளையும் மனிதரையும் குறிக்கும்
2. **வினையச்சொல்** – செயலைக் குறிக்கும்
3. **உரிச்சொல் (பெயரடை)** – பண்பைக் குறிக்கும்
4. **இடைச்சொல்**
5. **உவமைச் சொல்**

4.2 சொல்லின் உருவாக்கம் - மூன்று நிலைகள்

1. **வேர்/மூலம்** – அடிப்படை
2. **திரிபு** – விகுதி சேர்ந்து அர்த்த மாற்றம்
3. **முற்று** – மொழிப்பயன்பாட்டில் நிலைபெறுதல்

4.3 இணைச்சொல் உருவாக்கம்

- இரண்டு சொற்கள் இணையும் போது:
  - ஊன் + உணவம் = ஊணவம்
  - நீர் + நிலம் = நீர்நிலம்

5. விகுதி அமைப்பு மற்றும் காரகங்கள்

தமிழ் மொழியில் **விகுதி அமைப்பு** மிக முக்கியமானது.
விகுதி → சொல்லின் இடத்தை, காரகத்தை, பொருளை நிர்ணயிக்கும்.

5.1 பெயர்ச்சொற்களில் வரும் விகுதிகள்

- ஆண்மை / பெண் / இடர்பால்
- எண் - ஒருவன் / பலர்
- அதிகாரநிலை
- வேற்றுமை உருபுகள் (எ, அ, இன், ஆல்…)

5.2 காரகங்கள்

தொகைநிலை → கன்னியெச்சம்
கர்த்தா → செய்பவன்
கருமம் → செய்யப்படும் பொருள்
கருவி → செயலுக்கான கருவி
காரியம் → காரணம்
ஆதாரம் → ஆதாரமாகச் செயல்படுவது

உதாரணம்:
**“ராஜா புத்தகம் படிக்கிறான்.”**

- ராஜா → கர்த்தா
- புத்தகம் → கருமம்
- படிக்கிறான் → செயல்

6. வாக்கிய அமைப்பு (Syntax)

**(பக்கம் 17–20)**

தமிழின் வாக்கிய அமைப்பு **SOV – Subject / Object / Verb** அமைப்பைப் பின்பற்றுகிறது.

6.1 வாக்கியத்தின் மூன்று பகுதிகள்

1. **தொக்குப்பொருள் (Subject)**
2. **எதிர்பொருள் (Object)**
3. **செயல் (Verb)**

6.2 வாக்கிய வகைகள்

- கூற்று வாக்கியம்
- வினவல் வாக்கியம்
- ஆணை வாக்கியம்
- வேண்டுகோள் வாக்கியம்
- விருப்ப வாக்கியம்

6.3 வாக்கிய அமைப்பின் தனிச்சிறப்புக்கள்

- வினைச் சொல் எப்போதும் இறுதியில் வரும்.
- “என்ற” → இணைப்புச் சொல் முக்கியமானது.
- உருபுகள் மூலம் தொடர்பு, உறவு, காலம் அனைத்தும் தெளிவாக வெளிப்படுகின்றன.

6.4 தமிழ் வாக்கியத்தின் இயல்பான ஓட்டம்

தமிழ் வாக்கியம் சிந்தனை ஓட்டத்தோடு பொருந்தி இயல்பான ரிதத்தில் அமைகிறது:

**தலைவர் → செயல் பெறுபவன் → கருவி → செயல்**

எ.கா.:

**அவன் கல்லை கை கொண்டு எறிந்தான்.**

**<u>அலகு 4:</u>** இலக்கணம்

சொல்லியல் :-

சொல்லின் உருவாக்கம், அமைப்பு, மாற்றம், வகை, பொருள் ஆகியவற்றைப் பற்றி ஆய்வு செய்பவை **சொல்லியல் (Morphology)** ஆகும்.

சொல் உருவாகும் முறை:

**ஒலி → எழுத்து → சொல் → வாக்கியம்**

தமிழில் சொல்லின் அமைப்பு நுண்ணிய விகுதி மற்றும் திரிபு அடிப்படையில் அமைகிறது.

2. பெயர்ச்சொல் (Noun)

பெயர்ச்சொல் என்பது:

ஒரு மனிதன், உயிரினம், பொருள், இடம், காலம் அல்லது கருத்து போன்றவற்றுக்கு பெயரிடப்படும் சொல்.

எ.கா.:
மரம், குழந்தை, பூனை, சென்னை, காலம், அறிவு.

**2.1 பெயர்ச்சொல்லின் வகைகள்**

1. உயிரினப் பெயர்

மனிதன், மான், காகம், நாய்

2. பொருள்பெயர்

புத்தகம், நாற்காலி, விளக்கு

3. இடப்பெயர்

காஞ்சி, மதுரை, ஆவடி

4. காலப்பெயர்

இன்று, நேற்று, காலை, ஆண்டு

5. கருத்துப்பெயர் (Abstract Noun)

அன்பு, நன்மை, அறிவு, சிந்தனை

பெயர்ச்சொல்லின் பண்புகள்

எண் (Number)

- ஒருமை: மரம்
- பன்மை: மரங்கள்

பால் (Gender)

- ஆண்பால்
- பெண்பால்
- இடர்பால் (inanimate – உயிரில்லாதவை)

வேற்றுமை உருபுகள் (Case Markers)

பெயர்ச்சொல் உருபுகளைப் பெற்றால் அதன் இடமும் பண்பும் மாறும்.

எ.கா.:

- **மரம்** → **மரத்தை** (கருமம்)
- **மரம்** → **மரத்தால்** (கருவி)
- **மரம்** → **மரத்தில்** (ஆதாரம்)

---

## 2.3 பெயர்ச்சொல் - வடிவியல் அமைப்பு

பெயர்ச்சொல் அமைப்பு:

மூலம் + வகை + எண் + உருபு

எ.கா.:
**குழந்தை + கள் + இற்கு = குழந்தைகளிற்கு**

3. **வினைச்சொல்** (Verb)

வினைச்சொல் என்பது:

செயல், நிலை, மாற்றம், இருப்பு ஆகியவற்றைக் குறிக்கும் சொல்.

எ.கா.:
ஓடு, படி, சிரி, குடி, வந்தான்.

### 3.1 வினைச்சொல்லின் பண்புகள்

1. வேர்

வினையின் அடிப்படை வடிவம்.
ஓடு, படி, குடி

2. **காலம்** (Tense)

தமிழில் மூன்று காலங்கள் → காலமாற்றம் மிக நுட்பம்

- **இறந்த காலம்** – வந்தான்
- **நிகழ் காலம்** – வருகிறான்
- **எதிர் காலம்** – வருவான்

3. புருஷம் (Person)

- முதல்பொருள் - நான், நாங்கள்
- இடைப்பொருள் - நீ, நீங்கள்

- பிறப்பொருள் - அவன், அவர்கள்

4. **எண்** (Number)

ஒற்றை / பன்மை
அவன் (ஒற்றை)
அவர்கள் (பன்மை)

### 3.2 வினைச்சொல் வடிவியல் அமைப்பு

வேர் + காலம் + உருபு + புருஷம் + எண்

எ.கா.:
**படி + கிற + ஆன் = படிக்கிறான்**
**குடி + த்து + ள்ளான் = குடித்துள்ளான்**
**ஓடு + வன் = ஓடுவன்**

### 3.3 வினைச்சொல் வகைகள்

1. பெயர்ச்சி வினை

செயலைச் செய்பவர்/பெறுபவர்:
எ.கா.: அவன் ஓடுகிறான்.

2. செயன்பெயர் வினை (verbal nouns)

எ.கா.: ஓடுதல், படித்தல்

3. வினையெச்சம்

ஒரு செயல் → மற்றொரு செயல்
எ.கா.:
ஓடி வந்தான்
படி செய்து முடித்தான்

4. **கட்டளை வினை**

வா! போ! படி!

5. **ஆசை வினை**

வந்துவிடு, போகட்டும், சொல்லுங்கள்

**3.4 வினையின் கால அமைப்பு - உதாரணங்கள்**

நிகழ் காலம்

- சாப்பிடுகிறான்
- பாடுகிறாள்

இறந்த காலம்

- சாப்பிட்டான்
- பாடினாள்

எதிர் காலம்

- சாப்பிடுவான்
- பாடுவாள்

4. பெயர்ச்சொல் - வினைச்சொல் தொடர்பு

தமிழ் வாக்கியத்தில் பெயர்ச்சொல் + வினைச்சொல் இணைந்து:

கர்த்தா - கருமம் - வினை என்ற அமைப்பில் வருவது முக்கியம்.

உதாரணம்:

**“ராஜா (கர்த்தா) புத்தகம் (கருமம்) படிக்கிறான் (வினை).”**

**<u>அலகு 5:</u>** இலக்கிய வரலாறு

## நாயக்கர் கால இலக்கிய இலக்கணங்கள்

தமிழகத்தில் சோழர் ஆட்சிக்குப் பிறகு பாண்டியர் ஆட்சி தோன்றியது. ஆனால் பாண்டியர்களிடையே ஏற்பட்ட ஒற்றுமையின்மை காரணமாக இசுலாமியர் ஆட்சி தமிழகத்தில் ஏற்பட்டது. இந்த இசுலாமியர்கள் இந்துக்களின் சமய உணர்விற்குப் பாதகம் செய்தனர். அதன் காரணமாக இசுலாமியர் ஆட்சியை ஒழிக்கத் திட்டமிட்டனர். இம்முயற்சியின் பயனாக விஜயநகரப் பேரரசு துங்கபத்திரா நதிக்கரையில் உருவானது. அதே நேரத்தில் கி.பி. 1538இல் **குமாரகம்பண்ணன்** என்பவர் இசுலாமியர்களை வென்று மதுரையில் நாயக்கர் அரசுக்கு அடிகோலினார். அது முதல் நாயக்கர் ஆட்சி மதுரையில் ஏறக்குறைய 400 ஆண்டுகள் நிலைத்திருந்தது.

அக்காலக் கட்டத்தில் சோழர் ஆட்சிக் காலம் போன்று பெரிய காப்பியங்களும் புராணங்களும் தோன்றவில்லை. எனினும், பல சிற்றிலக்கியங்களும் சில இலக்கண நூல்களும் தோன்றின. அக்காலத்திய மொழி வரலாற்றை அறியச் சிறந்த ஆதாரங்களாக இவை விளங்குகின்றன.

### 5.1.1 இலக்கியங்கள்

நாயக்கர் காலத்தைச் **சிற்றிலக்கியக் காலம்** என்று கூறலாம். **நெஞ்சு விடு தூது, அழகர் கிள்ளைவிடு தூது, தமிழ் விடு தூது** போன்ற தூது நூல்கள் நாயக்கர் காலத்தில் தோன்றின. **மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்** போன்ற சிறந்த பிள்ளைத்தமிழ் நூல்களும் அக்காலக் கட்டத்தில் வெளிவந்தவை. **நந்திக் கலம்பகம்** நாயக்கர் காலத்தின் தொடக்கக் காலத்தில் தோன்றியது. கி.பி. 18ஆம் நூற்றாண்டில் தோன்றிய **திருக்குற்றாலக் குறவஞ்சி** (திருநெல்வேலி வட்டாரக் கிளைமொழி வழக்கு மற்றும் குறவர் சமூக வழக்குக் கூறுகளைக் கொண்ட நூல்), **முக்கூடற்பள்ளு**, **சீர்காழிப் பள்ளு** போன்ற பள்ளு

நூல்களும் சிற்றிலக்கிய வகைகளுள் நாயக்கர் கால மொழி மாற்றங்களை அறிந்து கொள்ள உதவுகின்றன.

புகழேந்தியாரின் **நளவெண்பா**வும், பரஞ்சோதி முனிவரின் **திருவிளையாடற்புராண**மும், வில்லிபுத்தூராரின் **வில்லிபாரத**மும், அருணகிரியாரின் **திருப்புக**ழும், தாயுமானவரின் **தனிப்பாடல்கள்** பலவும் நாயக்கர் கால மொழிநிலையை அறியப் பேருதவி புரிகின்றன.

### 5.1.2 இலக்கணங்கள்

மேலைநாட்டினரான **வீரமாமுனிவர்** (1680-1746) எழுதிய இலக்கண நூல்களான **செந்தமிழ் இலக்கணமும்**, **கொடுந்தமிழ் இலக்கணமும்** மிகவும் குறிப்பிடத்தக்கன. அவற்றை முறையே செய்யுளுக்குரிய இலக்கணம் என்றும், பேச்சு வழக்கிற்குரிய இலக்கணம் என்றும் கூறலாம். மேலும், அவர் எழுதிய **சதுரகராதி** பிற்கால அகராதி நூல்களுக்கு முன்னோடியாக விளங்குகிறது. பெயர், பொருள், தொகை, தொடை என்ற நான்கின் அடிப்படையில் தமிழ்ச்சொற்களுக்கு விளக்கம் தருவதாக அமைந்துள்ளது இந்நூல்.

வீரமாமுனிவர் எழுதிய **போர்த்துக்கீசியம் - தமிழ் - இலத்தீன் அகராதி**யும் மக்கள் பேசும் பேச்சு வழக்குக் கூறுகளைக் கொண்டுள்ளது. **சீகன்பால்கு ஐயர்** 1709இல் தரங்கம்பாடிக்கு வந்தவர். கிறித்துவ வேதமான பைபிளைத் தமிழ்ப்படுத்தியவர். தமிழ்-இலத்தீன் ஆகிய இரு மொழிகளுக்கும் பொதுவாக வழங்கும் பல சொற்களை எடுத்துக்காட்டியுள்ளார்.

இவ்வாறு மேலைநாட்டினர் சிலர், இலக்கண நூல்களையும் மொழி ஆய்வு நூல்களையும் எழுதினர். அவை நாயக்கர் கால இறுதியில் தமிழ்மொழிக் கூறுகள் சிலவற்றை அறிவதற்குச் சிறந்த ஆதாரங்களாகவும் விளங்குகின்றன.

தமிழில் நெடும்பாடல்களாய் அமைந்த பிரபந்த வகைகளைச் சிற்றிலக்கியம்' என்றும் குறிப்பிடுகிறோம் இடைக் காலப் பிற்பகுதி முழுவதும் சிற்றிலக்கியச் செல்வாக்கு மிகுதி இதன் தோற்றத்திற்கான வித்தும் வளர்ச்சியும் சங்க காலத்திலேயே காணப்படுகின்றன ஆற்றுப்படை

ஒருதுறையாகவும் தனிப்பெரும் பாடல்களாகவும் அன்றே வளர்ந்தமைந்தன அகப் புறத் துறைகள் தனித்தனிச்சிற்றிலக்கியங்களாகக் கிளைத்தன.

தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தம் வழக்காறுண்டெனினும் பன்னூறு வகைமைகள் காணப்படுகின்றன. பக்தி இலக்கியம் சார்ந்து வளர்ந்த சிற்றிலக்கிய வகைப் பலவாகும்

'பாட்டியல்' நூல்கள் என்பன சிற்றிலக்கிய வகைமை பற்றியனவாகும் இங்ஙனம் எண்ணிக்கை காணப்படினும் குறிப்பிட்ட சிலவே பெரும் செல்வாக்கும் படைப்புப் பெருக்கமும் கண்டன கோவை, உலா, தூது, பிள்ளைத்தமிழ் என இவ்வாறு பத்துப் பன்னிரண்டில் இவை அடங்கிவிடும்.

சிற்றிலக்கியங்களை மிகுதியாகப் படைத்துப் புகழ் பெற்றவர் பலராவர் குமரகுருபரர், சிவப்பிரகாசர், பிள்ளைப் பெருமாள் அய்யங்கார் போல்வார் பலராவர் பாரதியார் ஒருபா ஒருப ஃது, நான்மணிமாலை போன்ற சிற்றிலக்கியங்கட்குப் புத்துயிர் தர முயன்றார்.

### 1.2.1 பிரபந்தம் என்ற சொல்

பிரபந்தம் என்ற வட சொல்லுக்கு நன்கு கட்டப்பட்டது. நன்கு ஆக்கப்பட்டது என்று பொருள் தமிழில் 'யாப்பு' என்பதனோடு ஒக்கும்.அது இலக்கிய நூல்கள் அனைத்தையும் பொதுவாகச் கட்டத்தக்கது அதனால்தான் சிலர் சிறுபிரபந்தம் என்றும் சில்லரைப் பிரபந்தம் என்றும் இவற்றைக் கூறினர் தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்கள் என்னும் போது தமிழிலுள்ள காப்பியம் புராணம் சிறு நூல்கள் அனைத்தையும் உட்கொண்டே அவ்வாறு கூறப்பட்டு வந்தது என்பதைப் பாட்டியல் நூல்களைப் பார்த்துத் தெளியலாம் ஆயினும் பிரபந்தம் என்ற சொல் தமிழ் வழக்கில் சிறிய இலக்கிய நூல்களைச் சிறப்பாகச் சுட்டத் தொடங்கியது. அதற்கு நிகராகச் சிற்றிலக்கியம் என்ற சொல்லும் வழக்காற்றில் வரத் தொடங்கியது இச்சிற்றிலக்கிய நூல்கள் நெடும் பாட்டுப் போல்வன முற்ற முடிந்த ஒரு குறிப்பிட்ட பொருளின் மேலன பல துறை சார்ந்த பெருநூல்கள் போலல்லாது ஒரு சில துறைகளைப் பற்றிய செய்திகளையே உள்ளடக்கின

சுருங்கிய அளவில் அமைவன அதனால் குறைந்த காலத்தில் படித்து முடிக்கக் கூடியன இவை வட்டாரச் சார்பு மிக்கன. சங்ககாலப் பத்துப் பாட்டுக்கள் போலக் குறிப்பிட்ட இறைவனை மன்னனை, வள்ளலைப் பற்றிப் புகழ்வதற்காக, சிறப்பாக எடுத்துரைப்பதற்காக எழுதப்பட்டன.

### 1.2.2 காலம்

ஏனைய இலக்கிய வகைகளைப் போலவே சிற்றிலக்கிய வகையும் தமிழில் காலந்தோறும் கிளைத்து வந்திருக்கிறது ஐந்தருவி போல இடையறாது சிற்றிலக்கியமாகிய அருவி தமிழில் கொட்டிய வண்ணம் இருந்ததென்றுதான் கூறவேண்டும் சங்க இலக்கியத்திலேயே இவ்வகைமைகள் பல கிளைவிட்டன அவற்றுள் தலைமையானது ஆற்றுப்படை. பிற வகைமைகளுக்கான வித்துக்களையும் அங்கே காண்கிறோம் நீதியிலக்கியங்கள் சில சிற்றிலக்கிய வகைமைகளாகவே செழித்தன பக்தி இலக்கியம் சார்ந்த சிற்றிலக்கியங்களும் பல்கின அடுத்துத் தலைமை வாய்ந்த பிள்ளைத்தமிழ், தூது, உலாப் போன்ற பல சிற்றிலக்கியங்களும் தழைத்தோங்கின அதன்பிறகு இன்றுவரை முன்னைய மரபுகளின் வழிப்பட்ட சிற்றிலக்கியங்கள் சாத்திர சமயத் தோத்திரப் பாட்டுத்துறைகளனைத்தினும் தோன்றி வந்துள்ளன எனினும் சிற்றிலக்கிய வகை மேலோங்கிய காலம் என்று ஒன்றுண்டல்லவா? பதினைந்து, பதினாறு பதினேழாம் நூற்றாண்டுகளை நாம் சிற்றிலக்கியக் காலமென்றே அழைக்கலாம் எவ்வாறு பல்லவர் காலத்தைப் பக்தி இலக்கியக் காலமென்றும் இடைக்காலச் சோழர் காலத்தைக் காப்பிய காலமென்றும் அதன் மேலோங்கிய தன்மையாற் கூறுகிறோமோ அதுபோல் நாயக்கர் காலத்தைச் சிற்றிலக்கியக் காலம் என்று அழைக்கலாம்

முனைவர் நவீ செயராமன் தம் சிற்றிலக்கியச்செல்வம் என்ற நூலில் “தொல்காப்பியர் காலத்தில் இடம் பெற்ற சிற்றிலக்கிய வித்துச்சங்க காலத்தில் ஆற்றுப் படையாக முளைவிட்டு, ஐந்தாம் நூற்றாண்டில் அந்தாதியாகத் துளிர்த்து, ஏழாம் நூற்றாண்டில் உலாவாக மரமாகி, ஒன்பதாம் நூற்றாண்டில் கலம்பகமாகக் கிளைத்து, பதினோராம் நூற்றாண்டில் சதகமாகவும் பரணியாகவும் அரும்பிப் பன்னிரண்டாம் நூற்றாண்டில் பிள்ளைத் தமிழாக மொட்டாகி, பதினான்காம் நூற்றாண்டில் தூதாகப் பூத்து, பதினாறாம் நூற்றாண்டில் பள்ளாகக் காய்த்துப் பதினெட்டாம் நூற்றாண்டில் குறவஞ்சியாகக் கனிந்தது” என்று கூறுவது ஓரளவு இதன் வளர்ச்சிப் படிகளைக் காட்டும்.

### 1.2.3 வகைத்தொகை

பாட்டியல் நூல்கள் என்பன இவ்விலக்கிய வகைமைகளின் இலக்கணம் கூற வந்த நூல்களாகும். அவை பல்வேறு எண்ணிக்கைகளைத் தருகின்றன பன்னிரு பாட்டியல் 63 இலக்கிய வகைகள் பற்றியும், வெண்பாப் பாட்டியல் 55 வகைபற்றியும் நவநீதப்பாட்டியல் 53 வகைப்பற்றியும். சிதம்பரப் பாட்டியல் 63 வகைபற்றியும் இலக்கண விளக்கப் பாட்டியல் 90 வகை ப்பற்றியும் கூறுகின்றன.பிரபந்த மரபியல், பிரபந்த தீபிகை. சதுரகராதி, தொன்னூல் விளக்கம் முதலியவற்றில் 96 இலக்கிய வகைகள் பற்றிக் கூறப்படுகின்றன. எனினும் வரையறை இந்த எல்லைக்குள் அடங்காது என்பதை அறிஞர்கள் தெளிவுபடுத்தியுள்ளனர்: பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை தொல்காப்பியர் காலத்தில் வழங்கிய நாற்பத்திரண்டு வகைகள் பற்றியும் பாட்டியல் நூல்களில் கூறப்படாத எண்பத்தைந்து சிற்றிலக்கியவகைகள் பற்றியும் எடுத்துக் கூறியுள்ளார். இவை அகம் பற்றியவை, புறம் பற்றியவை வாய்மொழி இலக்கியம் பற்றியவை, யாப்புப் பற்றியவை பக்தி பற்றியவை என ஐந்து பெரும்பிரிவுகளாக நோக்கத்தக்கவை மேலும் அந்தாதி என முடிவன கோவை என முடிவன, மாலை என முடிவன விருத்தம். மஞ்சரி, பத்து என முடிவன என்றிவ்வாறும் நோக்கத்தக்கன எண்ணிக்கை மிகுதியாயினும் பெயரளவில் நிற்பன. ஒன்றிரண்டு நூல்கள் அளவில் நிற்பன, சிறப்பின்றிக்கிடப்பன பலவாகும். இவற்றுள் தலைமை வாய்ந்தவையாய்க் காணப்படுவன பதினான்கு வகைகளே எனலாம் அவை ஆற்றுப் படை, அந்தாதி, மாலை, பத்து (பதிகம்), கோவை, உலா, பரணி, கலம்பகம். பிள்ளைத்தமிழ், தூது, சதகம், மடல், பள்ளு, குறவஞ்சி என்பனவாம். இவற்றுள் பள்ளும் குறவஞ்சியும் இசைநாடக இலக்கியத்தின் பாற்படும்..

சிற்றிலக்கியத் தோற்றம் அகப்பாட்டு, புறப்பாட்டு பத்திமைப்பாட்டு, நாட்டுப்புறப்பாட்டு என்ற நான்கின் வழிப்பட்டதாகும். அகத்திணை, துறைகள் ஆகியவற்றைச் சார்ந்தெழுந்தவை பல, கோவை. மடல், கைக்கிளை, தூது என்றாற் போல்வன புறத்திணை, துறை சார்ந்தனவும் பல காஞ்சி, மாலை, கையறுநிலை, ஆற்றுப்படை, திருப்பள்ளியெழுச்சி என்றாற் போல்வன பத்திமையடிப்படையில் அந்தாதிகளாகவும் தமிழ் மாலைகளாகவும் கிளைத்த பாசுரங்கள் மிகப்பலவாகும். கும்மி, பள்ளு, சிந்து என்றாற் போல்வன நாட்டுப்புறப் பாடலடிப்படையில் கிளைத்தன.

தலைமை வாய்ந்தவை தவிரப் பிறவெல்லாம் பொருள். யாப்பு எண்ணிக்கை சார்ந்தே மாறிமாறி வெவ்வேறாய்ப் பெயரிட்டு வழங்கப்படுவனவாயின தொண்ணூற்றாறு சிறு பிரபந்தங்கள் என்ற தொடர் சிறுநூல்களின் எண்ணிக்கைப் பெருக்கத்தை நினைவூட்டும் பொதுவான தொடராகும் பக்திச் சிற்றிலக்கியங்கள் மட்டுமே நூற்றுக் கணக்கில் உள நாட்டுப்புறச் சிற்றிலக்கியங்களோ இன்னும் கணக்கிடப்பட்டில.சிந்து

என்றால் நொண்டிச்சிந்து, காவடிச்சிந்து வழி நடைச்சிந்து குள்ளத்தாரா சிந்து என்று நூற்றுக் கணக்காக வேறுபட்ட வையுள

பத்தாகப் புனையும் மரபிலிருந்து இருபது வகைகளாவது தமிழில் கிளைத்திருக்கும் பத்து, பதிகம், ஒருபா ஒருப∴து. இருபா இருப∴து தசாங்கம், பயோதரப்பத்து, இரட்டை மணிமாலை மும்மணிமாலை, நான்மணிமாலை என்றிவ்வாறே எண்ணிப் பார்க்கலாம் அந்தாதிகளும் யமகம் திரிபு சிலேடைகளும் உத்தியடிப்படையின சிற்றிலக்கியங்கள் அனைத்தையும் ஒருபடித்தாக எண்ணுவதும் தவறு அவற்றுட்பல உதிரிப்பாடல் நிலையிலிருந்து சிறிது வளர்ச்சி பெற்றன உலா, தூது கலம்பகம், பரணி. மடல் போன்றனவோ சிறு காப்பிய நிலையை எட்டிப் பிடிப்பன

ஒன்றற்கே பல பெயருடையன பெயர் வேறுபாட்டால் யாப்பும் பொருளும் வேறுபடுவன எண்ணிக்கையால் வேறுபட்ட பெயர்களைப் பெறுவன என்றிவ்வாறே நினைத்துப் பார்ப்பின் இலக்கிய உருவாக்கம் பற்றிய அடிப்படையுண்மைகளைத் தெளியலாம் இணைமணி மாலை, இரட்டை மணிமாலை. இரட்டைமணிக்கோவை என்பவற்றையும் மும்மணிமாலை, மும்மணிக்கோவை அல்லது நான்மணிக்கோவை என்பவற்றையும் இவ்வகை மாற்றங்கட்குச் சான்றாகக் காட்டலாம்.

தலைமகனின் ஊரையும் பேரையும் பாராட்டுதற்கே பல சிறு நூல்கள் தோன்றியுள்ளன ஊர் எண் செய்யுள், பெயர் எண்செய்யுள். ஊரின்னிசை, ஊர் நேரிசை, ஊர் வெண்பா பெயர் இன்னிசை. பெயர் நேரிசை பெயர் மாலை என்று பல சிறு நூல்கள் தோன்றின

அந்தாதி என எடுத்துக்கொண்டால் அந்தாதி நூற்றந்தாதி வெண்பா அந்தாதி கலித்துறை அந்தாதி பதிற்றந்தாதி ஒலியந்தாதி. கலியந்தாதி எனப் பல நூல்கள் கிளைத்தன எனினும் பதிற்றுப் பத்தந்தாதி என்ற வகையே பெரும் சிறப்புப் பெற்றுப் பல நூல்களைத் தோற்றுவித்தது சிற்றிலக்கியப் பட்டியல் கீழே தரப்படுகிறது இதில் காணாத பல நூல்களை நம் பாட்டியல் நூல்கள் தருமிடங்களும் உள: இதிலிருந்து விடுபடுவனவும் உள

1. அங்கமாலை
2. அட்டமங்கலம்
3. அரசன் விருத்தம்
4. அனுராகமாலை

5. அலங்காரப் பஞ்சகம்
6. ஆற்றுப்படை
7. இணைமணிமாலை
8. கண்படைநிலை
9. கலம்பகம்
10. காஞ்சிமாலை

11. காப்புமாலை
12. காப்பியம்
13. குழமகன்
14. குறத்திப்பாட்டு (குறவஞ்சி)
15. கைக்கிளைமாலை
16. இயன்மொழி வாழ்த்து , இரட்டைமணிமாலை
17. கேசாதிபாதம்
18. இருபா இருப∴து
19. உலா
20. உலாமடல்
21. உழத்திப்பாட்டு
22. உழிஞை மாலை
23. உற்பவமாலை
24. ஊசல்
25. ஊர் இன்னிசை
26. . ஊர் நேரிசை
27. ஊர்வெண்பா
28. எண் மாலை
29. கடைநிலை
30. கையறுநிலை
31. கோவை
32. சதகம்
33. சாதகம்
34. சின்னப்பூ
35. தாண்டகம்

இன்று 300க்கு மேற்பட்டவை, இனங்காணப்பட்டுள்ளன இவற்றுட் தலைமை வாய்ந்த பன்னிரண்டைப் பற்றிய வரலாற்றை அறிந்து கொள்வது நலம்.

ஆற்றுப்படை

பரிசில் பெற்றான் ஓர் இரவலன் தன் எதிரே வரும் வறுமைப்பட்ட இரவலனை விளித்து, தான் பரிசில் பெற்று வந்த வள்ளலின் சிறப்பையும் வீரத்தையும் கொடைப் பண்பையும் விளக்கி, நீயும் சென்று பரிசில் பெறலாம் எனக்கூறி அங்குச் செல்வதற்குரிய வழிவகைகளைக் கூறி ஆற்றுப்படுத்துவதே ஆற்றுப்படையாகும் இதற்கான இலக்கணம் தொல்காப்பியத்தில் குறிக்கப்படுகிறது.

**கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்**

**ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்**

**பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச்**

**சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும் (தொல், 1037)**

கூத்தர், பாணர்,பொருநர். விறலி ஆகியோரில் பரிசில் பெற்றவர் வழியின்கண் பெறாதவரைக் காண்பது ஒரு பகுதியாகும் செல்வம் பெற்றவன் ஒருபுறமும் வறியவன் மறுபுறமுமாக இவர்கள் உறழத் தோன்றுவர் பெற்றவன் தான்பெற்ற பெருவளம் பற்றியும் பெற்ற முறை தந்தவன் சிறப்பு முதலியன பற்றியும் வழிபற்றியும் கூறிப் பெறாதானும், பரிசில் பெற்றுச் சிறக்குமாறு விவரிப்பான் சங்க இலக்கியத்தில் பதிற்றுப்பத்திலும் புறநானூற்றிலும் சிறுசிறு ஆற்றுப்படைத் துறை அமைந்த பாடல்கள் உள

பத்துப்பாட்டில் செம்பாதி ஆற்றுப்படைகள் என்பது முன்னர்க் கூறப்பட்டது அவை திருமுருகாற்றுப்படை பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை பெரும்பாணாற்றுப்படை கூத்தராற்றுப்படை என்பன அவற்றுள் பொருநராற்றுப்படை காலத்தால் முற்பட்டதாதல் கூடும் என்ற கருத்தும் உண்டு இடைக்காலத்தில் ஆற்றுப்படைகள் வளரவில்லை. பிற்காலத்தில் கச்சியப்ப முனிவர் திருமேனி இரத்தினக் கவிராயர், தொழுவூர் வேலாயுத முதலியார் குலாம் காதிறு நாவலர், பின்னத்தூர் நாராயணசாமி ஐயர்

ஆகியோர் முறையே தணிகை யாற்றுப்படை, புலவராற்றுப் படை, நெஞ்சாற்றுப்படை, புலவராற்றுப் படை, இறையனாற்றுப்படை ஆகியவற்றை எழுதி இவ்வகைமையைப் போற்றினர் இஃது அகவல் யாப்பினையே மேற்கொண்டு பாடப்பெற்று வந்துள்ளது

அந்தாதி

ஒரு பாடலின் இறுதியில் உள்ள எழுத்து, அசை சொல் சீர், அடி யாதானும் ஒன்று அடுத்தப் பாடலின் முதலில் வரும்படி அமைத்துப் பாடுவது அந்தாதி எனப்படும் இறுதிப்பாடலின் முடிவு முதற்பாடலின் தொடக்கமாக இணையும்படி பாடுவதை மண்டலித்து முடிவதென்பர். இது யாப்பு அடிப்படையிலான திறன்களில் ஒன்று தொடை வகைகளுள் ஒன்றென யாப்பு நூலுடையார் விளக்குவர் தமிழில் அந்தாதி இலக்கிய வகையே மிகுதி என்பர் இன்ன பொருள்தான் பாடவேண்டும் என்ற வரையறை இல்லை பெரும்பாலும் விருத்தமே இதன் யாப்பு வடிவமாகும்

பதிற்றுப்பத்தில் நான்காம் பத்தும் ஐங்குறு நூற்றில் பதினெட்டாம் பத்தும் அந்தாதித் தொடையின. காரைக்காலம்மையாரின் அற்புதத் திருவந்தாதியே முதல் அந்தாதி என்பர்.கி.பி ஐந்து ஆறாம் நூற்றாண்டுகளில் இவ்வாறு இவ்விலக்கிய வகை முகிழ்த்து மலர்ந்து மணம் பரப்பியது முதலாழ்வார் மூவரும் பாடிய நூற்றந்தாதிகள் மூன்றும் இக்காலத்து எழுந்தவையே பக்தி இலக்கியத்தில் அந்தாதிகள் மிகுதி சேரமான் பெருமாள் நாயனாரின் பொன் வண்ணத்தந்தாதி குறிப்பிடத்தக்கது பதினாறாம் நூற்றாண்டில் வரதுங்கராம பாண்டியன் பாடிய திருக்கருவைப் பதிற்றுப் பத்தந்தாதி குட்டித் திருவாசகம் என்று சிறப்பாக அழைக்கப்படும். இவ்வகை 250 வரை கிடைத்துளது இதுவே சிற்றிலக்கிய வகையில் மிகுதி அடுத்தது பிள்ளைத் தமிழ்.

மாலை

மாலை கோவை என்ற பெயரிலும் தொன்று தொட்டுச் சிறு பிரபந்தங்கள் தோன்றி வளர்ந்து வந்துள்ளன இரட்டை மணிமாலை, மும்மணிக்கோவை. மும்மணி மாலை. நான்மணிமாலை இணைமணிமாலை என்பன இத்தகையன காரைக்காலம்மையார் பாடிய திருவிரட்டை மணிமாலை காலத்தால் முந்தியது

\

சேரமான் பெருமான் நாயனார் பாடிய திருவாரூர் மும்மணிக் கோவையும் குறிப்பிடத்தக்கது. பட்டினத்துப் பிள்ளையார் பாடிய கோயில் நான்மணி மாலையும் சிவப்பிரகாசரின் நால்வர் நான்மணி மாலையும் பக்தி இலக்கிய வரிசையில் போற்றப்படுவன வெண்பாவும் விருத்தமும் அல்லது

வெண்பாவும் கலித்துறையும் என இவ்வாறு இருவகைப்பாக்கள் மாறிமாறி வருவது இரட்டை மணிமாலை பெரும்பாலும் இருபது பாடல்கள் இடம்பெறும்.ஆசிரியம்,வெண்பா, கலித்துறை முப்பது பாடல்கள் மாறி மாறி வரின் மும்மணிக் கோவையாகும். வெண்பா, கலித்துறை ஆசிரியம் மூன்றும் முப்பது பாடல்களாக மாறிமாறி வரின் மும்மணி மாலையாம் வெண்பா,கலித்துறை,ஆசிரியம். விருத்தம் நான்கும் நாற்பது பாடல்களில் மாறி மாறி வரின் நான்மணிமாலையாகும் இவ்வகையின பக்தி இலக்கியத்துப் பெருவளர்ச்சி கண்டன

பத்து

பத்துப் பதிகம் என்பன இவ்வகையின ஒருவகைப் பாவினால் பத்துப் பாடல்கள் பாடுவதால் இப்பெயர் ஏற்பட்டது. சங்க இலக்கியத்துள் பதிற்றுப்பத்தும் ஐங்குறு நூறும் பத்துக்களைத் தோற்றுவித்தன ஐங்குறுநூற்றிலும் திருவாசகத்திலும் தெய்யோப்பத்து. அச்சோப்பத்து என்றிங்கனம் அழைக்கப்பட்டன. காரைக்காலம்மையின் திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள் இரண்டும் காலத்தால் மூத்த பதிகங்களாகும். ஒவ்வொன்றும் பதினொரு பாடல்கள் கொண்டவை பத்து எண்ணிக்கையில் சிறிது கூட்டியோ குறைத்தோ வந்தாலும் பதிகம் எனப்பட்டன பத்துக்களே வகைமைப் பெயர்களாக மாறும்போது பதிகம் எனப்பட்டன ஒருபா ஒருப∴து,இருபா இருப∴து என்பனவும் இதன் மறுபெயர் போல்வனவே வெண்பாவோ ஆசிரியமோ, தனித்தனிப் பத்துப் பாடல்கள் ஒரு பொருள் மேல் பாடினால் அவை ஒருபா ஒருப∴து எனப்படும். வெண்பாவும் அகவலும் அல்லது அசுவலும் வெண்பாவும் மாறி மாறி இருபது பாடல்கள் பாடப் பெறின். அவை இருபா இருப∴து எனப்படும் இரட்டை மணிமாலை மும்மணிக் கோவை போல்வனவும் இவற்றைப் போன்றனவே அல்லது அவை இவற்றின் வளர்ச்சியே தசாங்கம் என்பதும் இது போல அரசனுடைய கொடி, குடை முதலிய பத்து அங்கங்களையோ இறைவனது பத்து அங்கங்களையோ புகழ்வதாம்

தேசிய கவிஞர் பாரதியார் பாரதமாதா திருப்பள்ளி எழுச்சி பாரத தேவியின் திருத்தசாங்கம் ஆகியவற்றைப் புதுமைப் படுத்திப் புனைந்து தத்துள்ளார்.

கோவை

அகத்துறைப் பாடல்கள் களவு, கற்பு என்னும் பிரிவுடன் பலகூற்றுகளாகப் பிரிந்து திகழும். கைகோள்,துறை, கூற்று எனப் பிரிக்கலாம் கைகோள் என்பது களவு, கற்பு என்ற ஒழுக்கம் அவற்றுள் ஒவ்வொன்றும் பல துறைகள உடையது களவில் மதியுடம்படுத்தல், அறத்தொடு நிலை

எனை பல துறைகள் உள ஒவ்வொன்றையும் சார்ந்து கூற்றுக்கள் பல வரும். இவை நிரல்பட வரிசையாக அமைவதில்லை பிற்காலத்தில் இவ்வகத்துறை, கூற்றுக்களை எல்லாம் வரிசைப்படுத்தி ஒன்றன்பின் ஒன்றாகச் சங்கிலித் தொடர்பு போல ஒரு கோவையாகப் பாடினர் ஒரு பாட்டிற்கும் அடுத்தப் பாட்டிற்கும் நிகழ்ச்சி வரிசை அமைந்து கதை போலக் காணப்பட்டதால், இவ் வகைப்பாடல்கள் தொடர்புடையன போன்ற ஒரு மனத்தோற்றத்தை ஏற்படுத்தின

பாண்டிக்கோவை கிபி ஏழாம் நூற்றாண்டளவில் நின்ற சீர் நெடுமாறன் மீது பாடப்பட்டது.ஆசிரியர் பெயர் தெரியவில்லை முந்நூற்றைம்பது பாடல்கள் மட்டுமே இலக்கண உரை மேற்கோள்களாகக் கிடைத்துள்ளன மாணிக்கவாசகரின் திருக்கோவையார் புகழ் பெற்றது. இராசாக் கோவை என்றும் இது பாராட்டி அழைக்கப்படும்

கி பி பதின்மூன்றாம் நூற்றாண்டில் தோன்றிய பொய்யாமொழிப் புலவரால் பாடப்பட்ட தஞ்சைவாணன் கோவை அடுத்துப் புகழ்பெற்ற நூலாகும் நம்பியகப் பொருளுக்கு எடுத்துக்காட்டாகத் தஞ்சைவாணன் கோவைப்பாடல்கள் அமைந்துள்ளன. பாண்டியனின் படைத்தலைவனாகிய தஞ்சை வாணனைப்பற்றி எழுந்த நூல் இது.கோவை நூல்கள் அனைத்தும் கட்டளைக் கலித்துறை யாப்பினால் ஆனவை இவை இங்கனம் அகத்திணை இலக்கண நூல்களுக்கு எடுத்துக்காட்டாகப் பாடப் பட்டுப் பிறகு தனியாக வளர்ச்சி கண்டன. அகப்பாடல்கள் கோவை ஆனாற்போலப் புறப்பாடல்கள் மாலை ஆயின புறத்திணைச் செய்திகளையும் இவ்வாறு கோவைப்படுத்தி, வரிசையாகக் கூறி, இலக்கணமும் எடுத்துக்காட்டும் பாடிய நூலே புறப்பொருள் வெண்பா மாலை எனப்பட்டது.

அகத்திணைக் கோவைகளில் கிளவித் தலைவனைத் தவிர்த்துப் பாட்டுடைத் தலைவன் ஒருவனைப்பற்றித் தொடர்ந்து ஒவ்வொரு பாடலிலும் அவன் பெயர், நாடு,கொடையன்பு,வீரம் முதலியவற்றை அடைமொழியாகவோ உவமையாகவோ. சார்த்திப்பாடுவது ஒரு மரபாயிற்று பல்வேறு துறைகளைப் பாடாமல், ஒரே துறையைப் பற்றி நானூறு பாடல் பாடித் திறமையை வெளிப்படுத்தும் முறையொன்றும் இதிலிருந்து வளர்ந்தது அமிர்தகவிராயரின் ஒருதுறைக் கோவை நாணிக்கண்புதைத்தல் என்ற ஒரே துறையைப்பற்றியது வருக்க எழுத்துக்களின்படி முதல் எழுத்தில் தொடங்கி ஒவ்வோரெழுத்திற்கும் ஒரு பாடல் எனப்பாடும் ‘வருக்கக் கோவை ‘ என்பதொரு கிளையும் இதிற் பிரிந்து வளர்ந்தது இவையெல்லாம் வெறும் புலமை வெளிப்பாட்டுப் போட்டியாகவும், ஒரே மாதிரியாகவும் அமைந்தமையால் காலப்போக்கில் சுவைகுன்றித் தளர்ச்சி

உற்றன.இதுகாறும் எழுபது கோவைகள் வரை கிடைத்துள யாப்பிலக்கணத்துள் பா, பாவினம் அனைத்திற்கும் மேற்கோள் பாடல்களாகவே பாடிய நூல் வகை ஒன்றும் தோன்றியது ‘சிதம்பரச் செய்யுட்கோவை’ குறிப்பிடத்தக்கது

**உலா**

திருவீதி உலாவரும் தெய்வத்தைக் கண்டு தேவரடியார்கள் மயங்குவதாகப் பாடுவது ஒரு நாட்டுப்பாடல் மரபு அதுபோல அரசர்கள் உலாவரும்போது ஏழு பருவமங்கையரும் சுண்டு காதல் கொண்டு மயங்குவதாகப் புனையலாயினர் சிலர் ‘ஊரொடு தோற்றமும் உரித்தென மொழிப(1031) என்ற தொல்காப்பிய நூற்பா உலா இலக்கியத்தைப் பற்றியே குறிப்பதாக உரை கண்டனர்.காப்பியங்களில் பாட்டுடைத் தலைவன் உலா வரும் செய்தி உண்டு ஐந்து முதல் நாற்பது வயது வரை உள்ள பெண்கள் உலா வரும் தலைமகனைக் கண்டு காதல் கொள்வதாகப் பாடுவர் பேதை (5 -7 வயது), பெதும்பை (8-11), மங்கை(12-13), மடந்தை (14 19), அரிவை (20-25), தெரிவை (26-31). பேரிளம்பெண் (32-40) ஆகிய மகளிரின் இயல்பும் ஆடல் பாடலும் நன்கு புனையப்படும். அவர்கள் தலைமகனைக் கண்டு காதல் கொள்ளுகிற விதமும் அவர்களுடைய வயதிற்குத்தக அமையும்.

சேரமான் பெருமாள் நாயனார் இயற்றிய ‘திருக்கயிலாய ஞானவுலா’ என்பது காலத்தால் முற்பட்டது. இது தெய்வ உலா என்றும் ஆதிஉலா என்றும் சிறப்பித்து அழைக்கப்படும் உலாவரும் இறைவனின் மாட்சியும் காட்சியும் இந்நூலில் விரித்துப் பேசப்படுகின்றன சிவலோகத்தில் தேவர்கள் எல்லாம் வேண்டிக் கொள்ளச் சிவபெருமாள் உலாவந்து அவர்களை மகிழ்விப்பதாகப் பாடப்பட்டுள்ளது. சேரமான் பெருமாள் சுந்தரர் காலத்தவர் ஞான உலா தவிர இவர் திருவாரூர் மும்மணிக் கோவை, பொன்வண்ணத்தந்தாதி திருவந்தாதி முதலிய நூல்களையும் பாடியுள்ளார்.

பரணி

“ஆனை ஆயிரம் அமரிடை வென்ற

மானவனுக்கு வகுப்பது பரணி.”

என இலக்கண விளக்கப் பாட்டியல் இதற்கு இலக்கணம் கூறும் போர்க்கள வெற்றியைப் புகழ்ந்து பாடுவதே பரணி யாகும் அப்போர்கள் எங்கு நடை பெற்றனவோ அவ்விடத்தின் பெயரால் அவை அழைக்கப்படும் புறத்திணையில் இடம்பெறும் களவேள்வி களவாழ்த்து, முன்தேர்க்குரவை

பின்தேர்க்குரவை போல்வன பரணியிலக்கியம் தோன்ற அடிப்படையாகும். பழங்காலத்தில் ஏர்க்களம் பாடும் பொருநரேயன்றிப் போர்க்களம் பாடும் பொருநர்களும் இருந்தார்கள் அவர்களின் வாய்மொழிப் பாடலின் வழி வந்ததே பரணியிலக்கியம்.

போர்க்களத்தின் தெய்வம் காளி கொற்றவை அவ்வெற்றி தெய்வத்தை வழிபடும் விழாவே பரணியாகும். அத்தெய்வத்திற்குரிய நாளாகிய பரணி நட்சத்திரத்திற் கொண்டாடப்பட்டது கூளிகள் என்பன பேய்கள் போர் நடைபெறாமையால் வாடிய கூளிகள் காளியிடம் முறையிட அவள் விரைவில் போர் வர இருக்கிறது. வயிறார உண்ணலாம் என்று கூறுகிறாள் இவ்வாறு தொடங்கிப் போர் நிகழ்ச்சிகளை வருணிப்பனவே இந்நூற்பகுதிகளாகும்.

சயங்கொண்டார் பாடிய கலிங்கத்துப்பரணியே காலத்தால் முற்பட்டதாகும். இன்று தலைமைவாய்ந்த புகழ் பெற்ற நூலாக அவ்வகைமையை விளக்கி நிற்பதும் அதுவே. முதலாம் குலோத்துங்கன் அனந்தவர்ம சோடகங்கள் என்ற மன்னனது கலிங்க நாட்டின் மீது படையெடுத்தான் கருணாகரன் என்ற

படைத்தளபதி படையெடுத்துச் சென்று வெற்றி பெற்றுத் திரும்பினான் எனவே குலோத்துங்களையும் கருணாகரனையும் சிறப்பிக்க எழுந்ததே இந்நூல், தீபங்குடியில் வாழ்ந்த சயங்கொண்டார் சைவசமயத்தைச் சார்ந்தவர், சமயப் பொறுமை உடையவர் இவரது காலம் பி பதினோராம் நூற்றாண்டு என்பது தெளிவு. இவருக்கும் கவிச்சக்கரவர்த்தி என்ற சிறப்புப் பெயருண்டு.

கலம்பகம்

கதம்பம் என்ற சொல்லுடன் தொடர்பான பொருளுடையது இச்சொல் என்பர். பல்வேறு உறுப்புக்களைக் கொண்டு அகமும் புறமுமாய்க் கலந்து பல்வேறு பாவினங்களால் பாடப்படுவதால் இப்பெயர் பெற்றதென்பர். கலம்+பகம் எனப்பிரித்துக் கலம் என்பது பன்னிரண்டு என்றும் பகம் என்றால் அதிற்பாதி என்றும் கொண்டு. பதினெட்டு உறுப்புகளை உடையது கலம்பகம் என்றும் ஒரு சாரார் விளக்கம் கூறுவர். இதன் உறுப்புகள் நூல்தோறும் மிக்கும் குறைந்தும் வருகின்றன புயவகுப்பு, தவம், வண்டு, அம்மானை, பாண் மதங்கு கைக்கிளை சித்து, ஊசல், களி, மடக்கு, ஊர் மறம் காலம், தழை, இரங்கல் சம்பிரதம், கார், தூது. குறம், பிச்சியார். கொற்றியார் முதலியன உறுப்பு வகைகள் ஆசிரியப்பா, கலிப்பா,வஞ்சிப்பா. மருட்பாக்களும் தாழிசை

துறை விருத்தங்களும் மடக்கும் இதில் விரவிவரும் பலவகை யாப்புகளாகும். இஃது அந்தாதித் தொடையால் நூறு பாடல்கள் வரை பாடப்பெறும்

தெள்ளாறு எறிந்த மூன்றாம் நந்திவர்மனைப் பாராட்டிப் போற்றும் நந்திக் கலம்பகமே காலத்தால் முற்பட்டது. இது தோன்றிய காலம் கி பி ஒன்பதாம் நூற்றாண்டாகும் இந் நந்திவர்மன் தாலம் கி. பி. 825 -850 என்பர் நந்திவர்மனின் மாற்றாந்தாய் மகன் ஒருவன் புலமை மிக்கவன் என்றும் அவன் நந்தியைக் கொல்வதற்கு 'அறம்' வைத்துப் பாடியதே இந்நூல் என்றும் கூறுவர் அது தெரிந்தும் இந்நூலை அரங்கேறச் செய்து தமிழச்சுவை பருகி மகிழ்வுற்று. இறுதிப் பாடலைப் படிக்கும் போது பந்தல் தீப்பிடித்து, நந்தி கலம்பகத்தால் மாண்ட கதை நாடறியும் '**கலம்பகமே கொண்டு காயம்விட்ட தெள்ளாறை நந்தி** என்றும் தமிழ் நூல்கள் நத்தியைப் போற்றும்.

நம்பியாண்டார் நம்பி பாடிய 'ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகம்' பத்தாம் நூற்றாண்டில் தோன்றியது பிள்ளைப் பெருமாள் ஐயங்காரின் திருவரங்கக் கலம்பகம் குறிப்பிடத்தக்கது இரட்டையர்கள் திருவாமாத்தூர்க் கலம்பகம், தில்லை கலம்பகம் இரண்டையும் பாடியுள்ளனர் '**கண்பாயக் கலம்பகத்திற்கு இரட்டையர்கள்**' என அவர்கள் புகழ் பெற்றனர் இதுகாறும் 63 கலம்பகங்கள் பற்றிக் குறிக்கப்படுகிறது புலருக்கு - அம்பு புடியொம்

பிள்ளைத் தமிழ்

தலைவனையோ கடவுளையோ குழந்தையாகப் பாவித்துக் கொண்டு பத்துப் பருவங்களாக அமைத்துப் பாடுவது பிள்ளைத் தமிழ் எனப்பட்டது; ஒரு பருவத்திற்குப் பத்து விருத்தங்களாக நூறு பாடல்கள் பாடப்படும் பெரும் பாலும் கழிநெடில் ஆசிரிய விருத்தங்களே இடம் பெறும் இதனை ஆண்பாற் பிள்ளைத்தமிழ், பெண்பாற் பிள்ளைத் தமிழ் என இரண்டாகக் கூறுவர் காப்பு, செங்கீரை, தால், சப்பாணி. முத்தம் வருகை, அம்புலி, சிற்றில், சிறுபறை, சிறுதேர் என்பன ஆண்பாலுக்குரியன பெண்பாலுக்கு இறுதி மூன்றையும் நீக்கிவிட்டுக் கழங்கு, நீராடல், ஊசல் போல்வன பாடப்படும்.

ஓட்டக்கூத்தர் பாடிய இரண்டாம் குலோத்துங்கன் பிள்ளைத் தமிழே காலத்தால் முற்பட்டது என்பர். பன்னிரண்டாம் நூற்றாண்டில் உருப்பெற்ற இதனைச் சிறப்புறுத்தியவர் குமரகுருபரர் அவர் பாடிய மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழும் முத்துக் குமாரசுவாமி பிள்ளைத்தமிழும்" நிகரற்றவை பகழிக்கூத்தரின் திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழும் பத்துப் பிள்ளைத் தமிழ்

பாடிய மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் சேக்கிழார் பிள்ளைத் தமிழும் குறிப்பிடத் தக்கவை. **பிள்ளைத் தமிழே பெரிய தமிழ்**' என்று போற்றுமளவு தமிழிலக்கியத்தில் பெருவளர்ச்சி கண்டுள்ளது.

தூது

தன் கருத்தைப் பிறிதொருவருக்குத் தெரிவிக்குமாறு ஒருவரைத் தன்சார்பாளராக அனுப்புவதே தூது இலக்கியம் எனப்படும் புறம் சார்ந்த தூதுகள் பல, ஔவையார் அதியன் தூதனுப்பத் தொண்டைமானுழைத் தூது சென்றது புறநானூற்றில் காணப்படும் செய்தியாகும்.

அகப்பாடல்களிலும் தலைவி காமம் மிக்கக் கழிபடர் கிளவியால் அஃறிணைகளைக் கூடத் தூதனுப்புவதுண்டு.

கொற்றவன்குடி உமாபதி சிவாச்சாரியார் கி பி 14ஆம் நூற்றாண்டில் பாடிய, சைவ சித்தாந்த சாத்திர நூல்களில் ஒன்றாய நெஞ்சுவிடுதூது இவ்வகையில் முதல் நூல் எனப் போற்றப்படுகிறது. காலப்போக்கில் தூதுவிடும் பொருள்கள் புதிது புதிதாய் அமைந்துள்ளன.

“**இயம்புகின்ற காலத்து எகினமயில் கிள்ளை**

**பயம் பெறு மேகம் பூவை பாங்கி - நயந்த குயில்**

**பேதை நெஞ்சம் தென்றல் பிரமரம் ஈரைந்துமே**

**தூதுரைத்து வாங்கும் தொடை”** (**இரத்தினச் சுருக்கம்**)

அன்னம், மயில் கிளி மேகம் பூவை தோழி, குயில், நெஞ்சு தென்றல், வண்டு என்ற பத்துமே முன்பு தூதுவிடும் தகுதியுடையவனவாகக் கருதப்பட்டன. பின்பு பணம் தமிழ், புகையிலை, காக்கை என இவ்வாறு அவை பல்கின செருப்புக் கூடத் தூதுவிடும் பொருளாயிற்று'

**சதகம்**

நூறு பாடல் கொண்ட நூலுக்குச் சதகம் என்று பெயர் ஐங்குறு நூறும் பதிற்றுப்பத்தும் தோன்றிய தமிழில் நூறு பாடல் கொண்ட நூல் தோன்றுவது புதுமையன்று. மாணிக்கவாசகரின் திருச்சதகமே முதற்சதகமாகும். இஃது உள்ளமுருக்கும் பக்திப்பாட்டாகும். ஆயினும் சதகம் என்ற வடமொழிப் பெயர் அதற்கமைந்தது வடமொழியில் அவை நீதி போதனையும் தத்துவமும் உணர்த்தும் நூல்களாக விளங்கின இங்கு மண்டல அடிப்படையில் நாட்டு வரலாறு, நூல்களின் சிறப்பு உணர்த்துவன ஒருவகையாகவும் தெய்வ வழிபாட்டடிப்படையின ஒருவகையாகவும் கிளைத்தன கி பி பதினொன்றாம் நூற்றாண்டில், அவிநாசி ஆறைகிழாரின்

கார் மண்டல சதகமாகிய முதற் சதக நூல் தோன்றியதென முனைவர் ந வீ செயராமன் தம் சிற்றிலக்கியச் செல்வம் என்ற நூலில் குறிப்பிடுகிறார் சோழமண்டல சதகம், பாண்டி மண்டல சதகம், ஈழமண்டல சதகம் கொங்கு மண்டல சதகம் தொண்டை மண்டல சதகம், நந்தமண்டல சதகம் என்பன மண்டல சதகங்கள் என அழைக்கத்தக்கன. இவை நாட்டு வளம், புகழ், மன்னர்,கவிஞர், வள்ளல்கள் வரலாறுகளைக் கூறுவன.

படிக்காசுப் புலவர் தொண்டை மண்டல சதகத்தை மட்டுமன்றி, தண்டலையார் சதகத்தையும் பாடினார் இது செய்யுள்தோறும்

பழமொழிகளையும் அவற்றிற்கிணையான நீதிகளையும் கூறி இறைவன் துதியுடன் முடிவதாகும் இறைவன் துதிபாடும் சதகங்களும் பலவாகும் இசுலாமிய கிறிஸ்தவச் சமயத்தவரும் பல சதகங்களைப் பாடினர் இவை பள்ளிகளில் ஒரு காலத்து மனப்பாடம் செய்வதற்குரிய நூலாக வைக்கப்பட்டிருந்தனவென்றும் கலைக்களஞ்சியம் போலப் பல குறியீடுகளையும் தொகைகளையும் (பதினாறு பேறு, எண் வகை மணம் ) விளக்குவன வாய்க் கல்வி நல்கும் திறப்பாட்டுடன் இவை திகழ்ந்தனவென்றும் முனைவர் மு வ குறிப்பிடுகிறார்.

**மடல்**

மடல் என்பது அகத்திணையில் ஒரு துறையாகும். அவ்வடிப்படையில் பாடிய புலவரில் ஒருவர் ‘மடல் பாடிய மாதங்கீரனார் எனச் சங்க நூல்களில் சிறப்பித்து அழைக்கப்பட்டார். திருமங்கையாழ்வார் பெரிய திருமடல் சிறிய திருமடல்’ என்று நீண்ட பாசுரங்களை எழுதினார். தமிழில் ஆடவரே மடலேறுவதாக அச்சுறுத்துவதும். மடலேறுவதும் உண்டு மகளிர்க்கு அது மரபன்று ஆயினும் தம்மைத் தலைவியாகப் பாவித்துப் பாடும் திருமங்கையாழ்வார் மடற்கூற்று மகளிரிடமும் அமையலாம் என, இறைவன் மீது கொண்ட காதல் புலப்படப் பாடுகின்றார் இது தவிர வளமடல் அல்லது இன்பமடல் எனச் சிருங்காரச்சுவை மிக எழுதியவையும் உள வருண குலாதித்தன் மடல் போன்றவை அவை அந்நாளைய சிற்றரசர்களை மகிழ்விப்பதையே நோக்கமாகக் கொண்டு இவ்வின்பமடல்கள் எழுதப்பட்டன

குறம், குறவஞ்சி, பள்ளு ஆகியன இசை தழுவிய நாடக வடிவுள்ள, மக்கள் இலக்கியமாகிய நாட்டுப்புற இலக்கிய அடிப்படையுள்ள வகைகளாகும்.